



# தமிழரசு

16.2.1994 ரூ.3



பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
# காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR No.678/DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108



# தமிழரசு


திருவள்ளுவர் ஆண்டு 2025

மாசித் திங்கள் - 4

மலர்: 24 இதழ்: 16

16-2-1994

விலை: ரூபாய் மூன்று


## இந்த இதழில்...


தாயகத்தின் புகழ் சேர்க்கும் விளையாட்டு வீரர்கள் உருவாக வேண்டும்! -மாண்புமிகு முதல்வர் உரை ... 2

பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தகும் தன்னிகரில்லாத் தடகளப் போட்டிகள் ... 10

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம் ... 20

குடியரசு தின விழா ... 24

குடியரசு தின விழாவில் அண்ணாபதக்கம் பெற்றவர்கள் ... 28

மாவட்டங்களில் குடியரசு தின விழா ... 31

தமிழக அரசின் திட்டங்களுக்கு உலக வங்கியின் துணைத் தலைவர் பாராட்டு! ... 39

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ரூ.801 கோடி திட்டங்களைத் தொடங்கிவைத்து முதல்வர் உரை ... 41

வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம் சிலை திறப்பு விழா ... 46








# தாயகத்தின் புகழ் சேர்க்கும் விளையாட்டு வீரர்கள் உருவாக வேண்டும்!

## மாண்புமிகு முதல்வர் உரை

(மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், சர்வதேச அழைப்பு தடகளப் போட்டி மற்றும் 33-வது தேசிய தடகளப் போட்டிகள், 1994 ஆகியவற்றை, சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 2.2.'94 அன்று தொடங்கி வைத்து, ஆற்றிய பேருரை:)

இந்த நாள், தமிழ்நாட்டின் விளையாட்டு வரலாற்றில், பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். சர்வதேச தடகளப் போட்டியையும், 33-வது தேசிய தடகளச் சாம்பியன் பட்டப் போட்டிகளையும், நடத்துகின்ற பெருமை மிகு வாய்ப்பு, தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சென்னையில் இவ்விரண்டு தனிச் சிறப்புள்ள விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது, நம் மாநிலத்தின் விளையாட்டு வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையாக விளங்கும் என்று நான் நம்புகிறேன். எனவே, இந்த மகிழ்ச்சியான வேளையில், இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கு, இவ்விளையாட்டுக்கள் சென்னையில் நடைபெற, அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்காகவும், விளையாட்டில் அவர் கொண்டிருக்கிற உண்மையான ஈடுபாட்டிற்காகவும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு இணையத்தின் துணைத் தலைவர் என்ற முறையில், விளையாட்டு மேம்பாட்டிற்காக, நாம் எடுத்து வரும் அனைத்து முயற்சிகளுக்கும், பேராதரவை திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் வழங்கி வருகிறார். இந்த இருபெரும் விளையாட்டு நிகழ்ச்சிகளை சென்னை நகரத்தில் நடத்துவதற்கு ஆதரவை உடனடியாக வழங்கியமைக்காகவும், இப்போட்டிகளை நடத்த நமக்கு உறுதுணையாக இருந்தமைக்காகவும், இந்திய

அமெச்சூர் தடகளப் போட்டிகள் இணையத்தின் தலைவரும், நாடாளு மன்ற உறுப்பினருமான திரு. சுரேஷ் கல்மாதி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். விளையாட்டுத் துறையில், அவரது அனுபவமும், செல்வாக்கும் இவ்விரு போட்டிகளையும், மகத் தான அளவில் நாம் நடத்திடப் பெருந்துணை புரிந்தன. இந்த நிகழ்ச்சிகளை நேரில் காண்பதற்காக நாம் விடுத்த அழைப்பினை ஏற்றும், விளையாட்டு வசதிகள், விளை யாட்டுத் திறன், விருந்தோம்பல் ஆகியவற்றின் அடிப்படையில் நாம் வழங்கப்போவது என்ன, என்ப தைக் காண்பதற்காகவும், பல நாடு களிலிருந்தும் விளையாட்டுத்துறை 'ஜாம்பவான்கள்' வருகை புரிந் திருப்பது குறித்து, நான் மகிழ்வடை கிறேன். இன்று அவர்கள் நம் மிடையே இருப்பது, நம்மிடம் அவர்கள் கொண்டிருக்கும் நட்பை, பெரிதும் விளக்குவதுடன், நம் விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமையைச் சிறப்புறக் காட்டப் பெரிதும் ஊக்கமளிக்கும்.

33-வது தேசிய தடகளச் சாம் பியன் போட்டிகளில் பங்கேற்ப தற்காக நமது நாட்டின் சிறந்த தேசிய தடகளப் போட்டி வீரர்கள் 750 பேருக்கு மேல் இங்கு கூடி யிருக்கிறார்கள் என்பதும், எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. பூனா விலும், பம்பாயிலும் அண்மையில் நடைபெற்ற, தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்ட புத் துணர்வுடன், அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். தங்களது முந்திய சாதனைகளை முறியடித்து, புதிய சாதனைகளைப் படைக்க, சிறந்த முயற்சிகளை அவர்கள் மேற்கொள் வார்கள் என்று நான் நம்புகிறேன். அடுத்துவரும் 3 நாட்களில், சிற்சில நிகழ்ச்சிகளில், சர்வதேச விளை யாட்டு வீரர்களோடு, போட்டியிடு கின்ற, கூடுதல் பயனையும் நம் தேசிய விளையாட்டு வீரர்கள் பெறுவார்கள். இந்த சர்வதேச போட்டியானது, இன்னும் பெரிய சாதனைகளை நிகழ்த்த அவர்களுக்கு ஒரு தூண்டுகோலாக அமையும் என்றும் நான் நம்புகிறேன். பல் வேறு நாடுகளிலிருந்தும் வருகை புரிந்திருக்கிற எல்லா விளையாட்டு வீரர்களுக்கும், நல்வரவு கூறுவதில் மகிழ்கிறேன். தேசிய வீரர்களுக்கும்,





என்னுடைய சிறந்த நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையில் நீங்கள் தங்குவதற்கு, நாங்கள் செய்திருக்கும், எல்லா ஏற்பாடுகளும், உங்களுக்கு மகிழ்ச்சி யளிக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த மாநகரின் மனதுக்கினிய நட்புறவுச் சூழலும், இந்த மக்களது அன்பும் ஏற்ற சூழலை வழங்கி, உங்களை மிகச் சிறந்த நிலையில் வைத்து, அற்புதமான, உன்னதமான சாதனையை நீங்கள் படைக்க, உங் களுக்கு உதவிகரமாக இருக்கும் என் பதில் எனக்கு ஐயமில்லை.

**ஏழு மாதங்களில் ஓர் இமாலயச் சாதனை**

*1992*-இல், ஏழே மாதங்களில் இந்த பிரம்மாண்டமான ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தை நாங்கள் உருவாக்கினோம். கடந்த ஆண்டு, அதாவது *1993*, ஜனவரி மாதத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களால், இது திறந்து வைக்கப்பட்டது. இந்த நாட்டு மக்களுக்கு இதனை நாங்கள் அர்ப்பணித்திருக்கிறோம். சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் இதற்கு முன்னால் சென்னையில் நடைபெற முடியவில்லை. ஏனென்றால், கடந்த காலத்தில் இத்தகைய ஒரு விளை யாட்டரங்கம் சென்னை மாநகரத் தில் இல்லை. இந்தப் புதிய விளை யாட்டரங்கத்தின் உருவாக்கம்தான் சர்வதேச தடகளப் போட்டி நிகழ்ச்சி களை இந்த அளவுக்கு இங்கே நிகழ்த்துவதைச் சாத்தியமாக்கி இருக்கிறது.

இங்கே கிடைக்கும் பெருமளவு மேம்படுத்தப்பட்ட வசதிகளைத் தகுந்த முறையில் பயன்படுத்திக்





கொள்ள வேண்டும் என்றும் தேசிய சர்வதேச விளையாட்டுக் களங் களில் தங்கள் முத்திரையைப் பதிக் கின்ற அளவுக்கு, தக்க முறையில் பயிற்சி பெற்று, தங்களைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டுமென் றும், நம் மாநிலத்தின் இளையோர் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கே சர்வதேச தரத்தில் நீச்சல்குளம், உள்ளரங்கம், ஹாக்கி விளையாட்டரங்கம், நவீன டென்னிஸ் அரங்கம் ஆகியவற்றை, சென்னை மாநகரில் மேலும் மேலும் சர்வதேசப் போட்டிகளை நிகழ்த் தும்வண்ணம் உருவாக்க, நாங்கள் திட்டமிட்டு வருகிறோம். 1995-ஆம் ஆண்டு தெற்காசிய கூட்ட மைப்பு நாடுகளின் விளையாட்டுகள் சென்னை மாநகரில் நிகழவிருக் கின்றன என்பதையறிய நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். அவ்வமயம் பெருமளவில் மேம்படுத்தப்பட்ட புதிய வசதிகளோடு, நாங்கள் ஆயத்தமாக இருப்போம் என்று நம்புகிறேன்.

**நட்புறவையும் அமைதியையும் வளர்க்கும் விளையாட்டு**

விளையாட்டுகள் மக்களை ஒன்று படுத்துகின்றன. பெருஞ்சாதனை புரிவதையே தங்கள் ஒரே குறிக் கோளாகக் கொண்டு, தத்தம் துறை களில், கௌரவமும், புகழும் பெறு வதற்காக விளையாட்டு வீரர்கள் ஒருவரோடொருவர் போட்டி போடு கிறார்கள். வேறுபாடுகள் அனைத் தையும், விலக்கிவிட்டு, உடல், உள்ளம் இரண்டின் எல்லையற்ற ஆற்றல்களை உலகுக்குக்காட்ட அவர்கள் விழைகின்றார்கள். தேசம், மதம், நிறம் ஆகியவற்றைப் பொருட் படுத்தாமல், விளையாட்டு வீரர்கள் காட்டுகின்ற உடலாற்றல் மற்றும் உள்ளத் துணிவிலே பிறக்கும் பெருஞ்சாதனைகளை உடனடியாக அங்கீகரிப்பதில் பார்வையாளர் களும் தங்கள் பங்கைச் செலுத்து கிறார்கள். பார்வையாளர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் இடையே உள்ள இந்த நட்புப் பிணைப்பு, உலகில் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும், அமைதி காக்கவும், உண்மையிலே துணைபுரியும்.

**புதிய வீரர்களை உருவாக்குவோம்!**

விளையாட்டுகளும், விளையாட் டுப் போட்டிகளும் குறையக் கூடாது. அவை மேலும் அதிகமாகவே நமக்





குத் தேவை. இன்னும் பல தன்னிகரற்ற விளையாட்டு வீரர்களையும், வீராங்களைகளையும் நாம் உருவாக்க வேண்டும். அவ்வாறு செய்ய வேண்டியது, தாய் நாட்டுக்கு அவர்கள் கொண்டு வரப்போகின்ற புகழுக்காக மட்டுமல்ல! வெற்றிக்காக! மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்திலும் காட்டவேண்டிய, கட்டுப்பாடு, உறுதிப்பாடு ஆகியவற்றின் மொத்த வடிவமாக, இளைஞர்களுக்கு முன் உதாரணமாக விளங்குகின்ற வகையிலும், அவ்வாறு உருவாக்க வேண்டியது அவசியமாகும்.

**நமது முயற்சிக்குக் கிடைத்த முதல் பலன்**

இந்தியாவில் இன்று விளையாட்டுகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும், மேலும் மேலும் எண்ணிக்கையில் அதிகமாக இளைஞர்கள் பங்குபெற்று வருகிறார்கள். தேசிய அளவில் அவர்கள் சிறப்பாகவே செய்கிறார்கள். சர்வதேச தரத்தைப் பெறவேண்டுமென்றால், அவர்கள் இன்னும் நீண்டதூரம் முன்னேற வேண்டும். அவர்கள் கடினமாக உழைக்க வேண்டும்; கடுமையான பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும். சர்வதேசத் தரங்களில் அவர்களுக்குப் பயிற்சியளிக்க, தகுதி மிக்கப் பயிற்சியாளர்கள் தேவை. சரியான ஆற்றலாளர்கள், உரிய காலத்தில் அடையாளம் காணப்பட வேண்டும். சரியான திசையில், சரியான சூழலில் தங்கள் இலட்சியத்தை நோக்கி, திறன்மிக்க இளைஞர்கள் செல்வதற்கு அரசும், பொதுவாகச் சமுதாயமும், உதவ வேண்டும். அறிவியல் அறிஞர்கள், தொழில்நுட்பவாணர்கள், அறிஞர்கள், பொது வாழ்க்கையில் ஈடுபட்டுப் புகழ்பெற்றோர் போன்றோர் தாய்நாட்டுக்குத் தனிச்சிறப்பும், புகழும் கொண்டு வருவதைப் போலவே, விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுள்ள ஆண்களும், பெண்களும் தங்கள் தாயகத்துக்குச் சிறப்பும் புகழும் கொண்டு வருகிறார்கள் என்னும் உண்மை, இன்னும் பெருமளவில் உணரப்பட வேண்டும். அரசும், சமுதாயமும் கிடைக்கின்ற அனைத்து வளங்களையும், ஒருங்கு திரட்ட, ஒன்றுபட வேண்டும். அதன்மூலமாகத்தான் விளையாட்டில் வேட்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களின் தேவைகளை நாம் முழுமையாக நிறைவு செய்யமுடியும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை அமைத்ததன் மூலம், தமிழ்நாட்டில், நாம் ஏற்கெனவே இந்த முயற்சியைத் தொடங்கியிருக்கிறோம். நம் மாநிலத்தில், எவையெவை தேவை என்பதை இனங்காணவும், விளையாட்டு போட்டிகளின் வளர்ச்சிக்குரிய ஆதாரங்களை ஒன்று திரட்டவும் நம்மால் முடிந்திருக்கிறது என்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். மிகக்குறுகிய காலத்திலே நாம் நமது முயற்சிகளின் பலன்களைக் காணத் தொடங்கிவிட்டோம். அண்மையில் நடைபெற்ற தேசிய விளையாட்டுப் போட்டிகளில் நமது மாநிலம் 3-ஆம் இடத்தைப் பெற்றிருக்கிறது. இனிவரும் விளையாட்டுப் போட்டிகளில் நம் இளைஞர்களும், மகளிரும் இன்னும் உயரிய இடத்தைப் பெறுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**நம் வீரர்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு**

நம் அழைப்புக்கு இணங்கி, சர்வதேச விளையாட்டு வீரர்கள் காட்டியுள்ள ஈடுபாடு, அபரிமிதமாக உள்ளது. அடுத்துவரும் நாட்களில் இதே விளையாட்டு அரங்கத்தில், விளையாட்டில் விருப்ப



முன்னோரும், பார்வையாளரும், உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் தத்தம் போட்டிகளில், செயல்படுவதைக் காணுகின்ற வாய்ப் பைப் பெறுவார்கள். சர்வதேச வீரர் களோடு நம் இந்திய வீரர்கள் போட்டியிடுகிற வாய்ப்புக் கிடைக் கும். இந்தப் போட்டியானது, இந்திய விளையாட்டு வீரர்கள், தங்கள் செயல்திறனை இன்னும் வளர்த்துக் கொள்ள உதவும். இத்தகைய சர்வதேசப் போட்டிகளில் இந்திய வீரர்கள் கலந்துகொள்வது, இந்த விளையாட்டுப் போட்டிகளின் யுகத் தில், தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்குத் தேவையான, இன்றியமையாத நம்பிக்கையையும், விலை மதிப்பற்ற அனுபவத்தையும் அவர்களுக்கு வழங்கும்.

தேசிய, சர்வதேச தடகள வீரர்கள் அனைவரையும், இங்கு கூடியிருக் கும் அனைத்து விருந்தினர்களையும் மறுமுறையும் மனதார வரவேற்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

**அற்புதக் கலை நிகழ்ச்சிகள்!**

இன்னும் சிறிது நேரத்தில் கண் ணைக் கவரும் கலை நிகழ்ச்சிகளை யும், உடற்பயிற்சி நிகழ்ச்சிகளையும் வழங்க இருக்கும் 12,500 சிறுவர், சிறுமியர்க்கு எனது சிறப்பான வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்ள வேண்டும். கடந்த சில வாரங்களாக அவர்கள் மிகக் கடுமை யாக உழைத்து, அழகும், முழுமை யும் உடைய அற்புதக் காட்சியை வழங்க, இன்று அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நமக்கு முன்னால், வண்ண வண்ணக் கொடிகளால் வடிவங்களை வழங் கிக் கொண்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான பையன்களுக்கு "உங் களுக்கு என் நன்றி" என்று தனிப் பட்ட முறையில் நன்றியைக்கூறிக் கொள்ள நான் விழைகிறேன். இந்த தொடக்க விழா முழுமைக்கும், இசையமைத்து வழங்கியிருக்கும் திரு ஏ.ஆர். ரகுமான் அவர்களுக்கும், விரைவிலே நீங்கள் காணவிருக் கின்ற பல்லாயிரக்கணக்கான பள்ளி மாணவ மாணவியரின் நடனங் களை வடிவமைத்துத் தந்திருக்கும் திரு கே.எஸ். ரகுராம் அவர்களுக் கும், இவற்றுக்கான பாடல்களை எழுதியிருக்கும் கவிஞர் நா. காம ராசன், திரு கோமதிநாயகம் ஆகிய பாடலாசிரியர்களுக்கும் என் நன்றி















யைத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

கரகம், காவடி, பொய்க்கால் குதிரை போன்ற தமிழகத்தின் புகழ்மிக்க நாட்டுப்புற நடனங்களையும், உயிரைச் துச்சமாக மதித்து வழங்கும், வியக்கத்தக்க மயிர்க்கூச்செறியும் மோட்டார் சைக்கிள் நிகழ்ச்சிகளை, வழங்கப் போகின்ற காவல்துறையைச் சார்ந்த ஆடவர், மகளிர் அனைவருக்கும், விந்தைமிகு தீப்பந்த விளையாட்டை நிகழ்த்தவிருக்கும் இரயில்வே பாதுகாப்புப் படையைச் சார்ந்த அனைவருக்கும் என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தப் பள்ளிக் குழந்தைகளுக்கெல்லாம் பயிற்சியளித்து, இந்தத் தொடக்க விழாவில் கலந்துகொள்ளும் அளவுக்கு அவர்களை உருவாக்கியிருக்கின்ற 500-க்கும் மேற்பட்ட ஆசிரியப் பெருமக்களுக்கு, நன்றி தெரிவிக்காவிட்டால் நான் என் கடமையிலிருந்து வழுவியதாக அமையும்.

கோலகலமான இந்தத் தொடக்க விழாவினுடைய தலைமை ஒருங்கிணைப்பாளராகவும், தமிழ்நாடு காவல்துறையின் சட்டம் மற்றும் ஒழுங்கு, காவல்துறை கூடுதல் இயக்குநராகவும் விளங்கும் திரு வால்டேர் ஐசக் தேவாரம் அவர்களுக்கும், இந்தத் தடகளப் போட்டிகள் வெற்றிகரமாக நடத்து வதற்கு, ஓய்வு உறக்கம் இல்லாமல், இடையறாது கடுமையாக உழைத்திருக்கும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன் அவர்களுக்கும், எங்களுடன் சிறப்பாக ஒத்துழைத்த தமிழ்நாடு அரசு அலுவலர்கள் அனைவருக்கும், என் மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால் அவர்களுக்கும், சென்னை நகர காவல்துறை ஆணையாளர்; திரு ஆர்.இராஜகோபாலன் அவர்களுக்கும், புலனாய்வுப் பிரிவு காவல்துறைத் தலைவர் திரு ஒ.எக்ஸ். அலெக்சாண்டர் அவர்களுக்கும், மிகச் சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தமைக்காக என் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்குக் கீழ், பணியாற்றி இருக்கும் காவலர்கள், அதிகாரிகள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தி ஒலிபரப்புத்துறை சர்வதேச திரு கே.பி. சிங்தியோ அவர்களுக்கும், இந்தத் தடகளப் போட்டிகளின் தொடக்க விழாவையும், நிறைவு விழாவையும் தொலைக்காட்சி தேசிய அலைவரிசையில் ஒளிபரப்பவும், ஒவ்வொரு இரவும், அன்றைய நிகழ்ச்சிகளில் சிறப்பானவற்றை ஒளிபரப்பவும் அன்புடன் ஏற்பாடு செய்தமைக்காக என்னுடைய உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

**வாழ்த்துக்கள்**

புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் செயற்கை இழை ஓடுகளத்தைத் திறந்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஓடுகளம் வரவிருக்கும் அண்மைக்காலத்தில் இணையற்ற தடகள வீரர்களை நிச்சயமாக உருவாக்கும் என்று நம்புகிறேன்.

சர்வதேச அழைப்புத் தடகளப் போட்டியையும், 33-வது தேசிய தடகளப் போட்டியையும், மகிழ்ச்சியோடு தொடங்கி வைக்கிறேன். தடகள வீரர்கள் நிகழ்த்தப்போகும் பெருமைக்குரிய பொன்னான சாதனைகளைக் காண்பதற்காக நாடு முழுவதும், இலட்சக்கணக்கான மக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். உங்கள் அனைவருக்கும், என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

தடகளப் போட்டி:



# புதிய சாதனை படைத்தவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் பரிசு!

சென்னையில், ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சர்வதேச அழைப்புத் தடகளப் போட்டிகளைக் கண்டுகளித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடந்த சில நாட்களில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் இதற்கு முன்பு நடைபெற்ற இதுபோன்ற போட்டிகளில் புதிய ரெக்கார்டுகளைப் படைத்தவர்களுக்கு உடனடியாகப் பணமுடிப்பு வழங்க வேண்டுமென்று அறிவித்தார். அதன்படி தேசிய அளவில் புதிய சாதனை நிகழ்த்தியவர்களுக்கு (Creating new National Record) 50,000 ரூபாய் பண முடிப்பும், முந்தைய போட்டிகளின் சாதனைகளை முறியடித்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு 25,000 ரூபாயும் பரிசாக வழங்கப்படும் என, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

மாண்புமிகு முதல்வரின் அறிவிப்பின்படி, 1500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தேசிய அளவில் புதிய சாதனை படைத்த (New National Record) இரயில்வேயை சேர்ந்த ஜே. சிக்தருக்கு 50,000 ரூபாய் பரிசும், ஆண்களுக்கான வட்டு எறிதல் (Discus Throw) போட்டியில் புதிய சாதனை படைத்த அஜித் பகதூரியாவுக்கு 25,000 ரூபாயும், ஆண்களுக்கான 5,000 மீட்டர் ஓட்டப்பந்தயத்திலும், ஆண்களுக்கான 1500 மீட்டர் ஓட்டப்பந்தயத்திலும், புதிய சாதனை படைத்த இரயில்வேயைச் சேர்ந்த பகதூர் பிரசாதுக்கு 50,000 ரூபாயும், பெண்களுக்கான 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் புதிய சாதனை படைத்த ஷைனி வில்சனுக்கு 25,000 ரூபாயும், பெண்களுக்கான 3,000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில், மோலி சாக்கோவுக்கு 25,000 ரூபாயும், பெண்களுக்கான வட்டு எறிதல் (Discus Throw) போட்டியில் புதிய சாதனை படைத்த, நீலம் ஜே.சிங்கிற்கு 25,000 ரூபாயும், ஹெப்டாத்லான் (7 பதக்கங்கள்) போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரே விளையாட்டு வீராங்கனைக்குச் சிறப்புப் பரிசாக 25,000 ரூபாயும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளையாட்டுத் திடலிலேயே வழங்கினார். அவரை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தத்து எடுத்துக்கொண்டு, அவரது விளையாட்டு வளர்ச்சிக்கு அனைத்து உதவிகளையும் வழங்கும் என அறிவித்தார்.

சென்னையில் தான் நிரந்தரமாகத் தங்குவதற்காக ஏற்பாடுகளைச் செய்வதற்குப் பண உதவி கோரிய இந்தியத் தடகளப் போட்டிகளின் நம்பிக்கை நட்சத்திரமான திருமதி ஷைனி வில்சனின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் வழங்கினார்.

பரிசுகளையும், பண உதவிகளையும் பெற்ற விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், தங்களுக்கு மிகுந்த ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளித்த மாண்புமிகு முதல்வருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். தன்னைக் காணவந்த பல்வேறு நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைச் சந்தித்துப் பேசிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், விளையாட்டுத் துறையில் அவர்கள் மேலும் சிறப்புகளைப் பெறவேண்டுமென வாழ்த்தினார்.









# பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தகும் தன்னேரில்லாத் தடகளப் போட்டிகள்!

**சா**தனைகளைச் சரித்திரங்களாகப் படைத்துவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருக்கரங்களால், பன்னாட்டு அழைப்புத் தடகளப் போட்டிகள் மற்றும் ரூ.2 கோடி செலவில் செயற்கை இழை ஓடு களம் ஆகியவை மிகுந்த உற்சாகத்தோடும் ஆரவாரத்தோடும் தொடங்கிவைக்கப்பட்டன.

விளையாட்டுத் துறையின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சாதனை, தமிழகமெனும் மகுடத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் பதிக்கப்பெற்ற மதிப்புமிகு மாணிக்கக் கல்லாகும்!

சிங்காரச் சென்னையில் சீரும் சிறப்புமாக நடைபெற்ற இந்தப் பன்னாட்டுத் தடகளப் போட்டி மற்றும் 33-வது தேசியத் தடகளப் போட்டிகளைக் காண, தமிழகமே திரண்டு வந்ததோ என்று வியக்கும் வகையில் மக்கள் கூட்டம் அலை மோதியது!

சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கில், 2.2.94 அன்று பிற்பகல் 3.15 மணிக்கு இந்த வண்ணமிகு விளையாட்டு விழா தொடங்கியது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அரங்கத்துக்குள் வந்ததும், குழுமியிருந்தவர்கள், ''தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெயலலிதா வாழ்க! என முழங்கி ஆரவாரம் செய்தனர்.

தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு க. பொன்னுசாமி அவர்கள், பொன்னாடை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களுக்கு கல்வித்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப., பொன்னாடை போர்த்தினார்.

## திரு சுரேஷ் கல்மாதி வாழ்த்துரை

இந்திய அமெச்சூர் அத்லெடிக் சங்கத் தலைவர் திரு சுரேஷ் கல்மாதி அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில்—

''மிகவும் ஆற்றல்மிக்க முதல் அமைச்சர்களைக் கொண்ட மராட்டியமும், தமிழ்நாடும் அதிர்ஷ்டம் செய்தவை. மராட்டிய முதலமைச்சர் சரத்பவாரும், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும் விளையாட்டு என்பது தேசியப் பெருமை என்று கருதுபவர்கள். அவர்களை நான் போற்றி வணங்குகிறேன்.



''தமிழக முதலமைச்சர் உருவாக்கியுள்ள இந்த விழாவைப் பார்த்தால், ஏதோ கனவு போல இருக்கிறது. வெகு காலமாகத் தடகள விளையாட்டுகளுக்காக நல்ல அடிப்படை அமைய வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்தோம். இனி எதிர்காலத்தில் சர்வ தேசப் போட்டிகளையும், தேசியப் போட்டிகளையும் இங்கு நடத்த முடியும். அடிப்படை வசதிகளை உருவாக்கிவிட்டதால், வெற்றிகளைப் பெறுவதற்கு நீண்ட காலத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

''தமிழக முதலமைச்சரும் இளைய வயதினர், அவர் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்காக நீண்ட காலத் திட்டங்களை உருவாக்க வேண்டும். சமீபத்தில் நடந்த தேசிய விளையாட்டுப் போட்டியில், தமிழ்நாடு 3-வது இடத்தைப் பெற்று இருப்பது நல்ல தொடக்கமாகும்.

''இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பா. சிவந்தி ஆதித்தன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். தென்னகத்தில் விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு முன்னணியில் இருக்க முடியும்''





அட்டை சொல்லும் செய்தி

**திரு பா. சிவந்தி ஆதித்தன்**

இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் வாழ்த்துரை வழங்கு கையில் கூறியதாவது:-

''இன்றைய தினம், தமிழ் நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் நன்னாள். தொலைநோக்குப் பார்வையும், மிகுந்த ஆற்றலும் கொண்ட நமது முதலமைச்சரால் உலக விளையாட்டு வரலாற்றில் தமிழ்நாடு மிகவும் சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

''நமது முதலமைச்சர் அவர்கள், பதவி ஏற்ற நாளில் இருந்து விளையாட்டு மேம்பாட்டுக்காகவும், இளைஞர் நலனுக்காவும் முழுமையான ஈடுபாட்டுடன் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களை முதலமைச்சராகப் பெற்ற இளைஞர் சமுதாயம், மிகவும் அதிர்ஷ்டம் செய்துள்ளது.

''தமிழ்நாட்டில் விளையாட்டையும், அதற்கான அடிப்படை வசதிகளையும் எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் தீவிரமாகச் சிந்தித்து, அதற்காக அயராது பாடுபடுகிறார்.

''திட்டமிடுதலிலும், எண்ணங்களைச் செயல்படுத்துவதிலும், நமது முதலமைச்சர் புதுமை செய்து உள்ளார். அவருடைய தலைமையில், தமிழ்நாட்டில் இன்று விளையாட்டுத் துறையின் பொற்காலம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. குறுகிய காலத்தில் இதுபோல அரிய சாதனையை யாரும் செய்தது இல்லை. உண்மையில் நமது முதலமைச்சர், முந்திய சாதனைகளை முறியடிப் பதைத் தனது வழக்கமாகக் கொண்டு இருக்கிறார்.

''ஒரு ஆண்டுக்கு முன்பு இந்தப் பிரமாண்டமான நேரு ஸ்டேடியம் கட்டப்பட்டது. முதலமைச்சரின் வழிகாட்டுதலால் 6½ மாதங்களில் இந்த ஸ்டேடியம் கட்டிமுடிக்கப் பட்டு, அதன்பிறகு தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டுத் துறையில் ஆர்வம் கொண்ட மக்களுக்கு, சர்வதேசக் கால்பந்து விளையாட்டு வீரர்களைக் களத்தில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

''இப்போது இந்தப் புகழ்மிக்க சர்வதேசத் தடகளப் போட்டியை நடத்துவதன் மூலம், மற்றொரு சாதனையை முதலமைச்சர் முறியடித்துள்ளார். இந்தியாவில் இது வரை தடகளப் போட்டியில் பங்கு பெற இத்தனை நாடுகள் நமது அழைப்பை ஏற்று வந்ததில்லை. 30 நாடுகளில் இருந்து சர்வதேசப் புகழ் வாய்ந்த, 60 விளையாட்டு வீரர்களும், 750 இந்திய விளையாட்டு வீரர்களும் இந்தப் போட்டியில் கலந்துகொள்வது தமிழ்நாட்டுக்குப் பெருமை அளிக்கும் ஒன்றாகும். விளையாட்டில் ஆர்வம் கொண்ட நமது மக்களுக்குச் சரியான விளையாட்டு விருந்து இது.

''நிரந்தரமான விளையாட்டு அடிப்படை வசதிகளை உருவாக்கி, விளையாட்டு வீரர்களுக்கு ஆக்கப் பூர்வமான வசதிகளைச் செய்து கொடுத்து, இதுபோல புகழ்மிக்க போட்டிகளை நடத்துவதன்மூலம், நமது இளைஞர்களுக்கு உற்சாகம் கொடுப்பதே விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காக நமது முதலமைச்சர் எடுத்துக்கொள்ளும் முயற்சியாகும்.

''நீண்டகாலத் திட்ட அடிப்படையிலே, இந்த ஸ்டேடியம் கட்டப் பட்டு, செயற்கை ஓடுதளம் அமைக் கப்பட்டுள்ளது. இந்த ஸ்டேடியத் துக்கு அருகில் ஒரு நீச்சல் குளம், உள் விளையாட்டு அரங்கம், சர்வ தேசத் தரத்தில் வெலோட்ரம் (சைக் கிள் போட்டிகள் நடத்தும் களம்)

## சிந்தை கவர்ந்த விந்தைக் காட்சிகள்!

**சர்வதேசத் தடகளப் போட்டி, நேரு விளையாட்டு அரங்கில் நடந்தபோது, விழா மேடைக்கு எதிரே 'விந்தைக் காட்சி' ஒன்று எல்லாரையும் வியப்பில் ஆழ்த்தியது.**

இவ்வாறு வியப்பில் ஆழ்த்தியவர்கள் 3000 பள்ளி மாணவ, மாணவியர். ஆம். 30 வரிசைப் படிக்கட்டுகளில் அமர்ந்துகொண்டு, பலவண்ணக் கொடிகளை மாற்றி மாற்றி வடிவங்களை வடித்துக் காட்டினார்கள். அவ்வப்போது தமிழ், ஆங்கில வார்த்தைகளையும் உருவாக்கிக் காட்டியது கண்டு உள்ள படியே அவர்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை!

வணக்கம், நல்வரவு, புரட்சித்தலைவி வாழ்க! வாழ்க!, தமிழக முதல்வரே வருக! வருக!, எல்லோருக்கும் விளையாட்டு என்று அவர்கள் வண்ணங்களை மாற்றி நம் எண்ணங்களைக் கொள்ளை கொண்டார்கள்.

மாமல்லபுரம், வானவில், காட்டில் இரு யானைகள், குட்டியுடன் மான் புல் மேய்வது அழகிய பூந்தோட்டம், வண்ண மலரும் வண்ணத்துப் பூச்சியும்- இப்படி இயற்கைக் காட்சிகளோடு, அம்பு எறிதல், ஓட்டப் பந்தயம், விளையாட்டுத் தீபம் ஆகியவற்றை விளக்கும் காட்சியும் பலத்த கைத்தட்டலைப் பெற்றன

இவ்வாறு இந்தப் பள்ளிக் குழந்தைகள் நிகழ்த்திக் காட்டிய உருவகங்கள், அவர்களின் திறமைகளை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. அதேசமயம் திறமைவாய்ந்த ஒரு ஓவியன் தீட்டிய மிகச் சிறந்த ஓவியமாகவும் அது திகழ்ந்தது.

அந்தக் குழந்தைகளையும், அவர்களுக்குப் பயிற்சியளித்தவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.



அடங்கிய ''டாக்டர் ஜெ.ஜெயலலிதா விளையாட்டு வளாக''த்தை அமைப்பதே எதிர்காலத் திட்டங்களாகும். இந்த அடிப்படையில் வசதிகளைச் செய்துவிட்டால், எதிர்காலத்தில் தமிழ்நாடு பெருமையுடன் சர்வ தேசப் போட்டிகளை நடத்த முடியும்.

''1995-ஆம் ஆண்டில் தெற்கு ஆசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளைச் சென்னையில் நடத்த முதலமைச்சர் சம்மதம் தெரிவித்து இருப்பது நமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. நமது மாநிலத்தின் வரலாற்றில் மிகவும் புகழ்மிக்க இந்தப் போட்டியை மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் எதிர் நோக்குகிறோம்.

''எங்கள் அழைப்பை ஏற்று, இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள வந்து இருக்கும் வெளி நாட்டு, மற்றும் இந்திய விளையாட்டு வீரர்களுக்குப் பாராட்டு தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்''.



### மாண்புமிகு கல்வியமைச்சர்

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு க. பொன்னுசாமி அவர்கள் தம் தலைமையுரையில் கூறியதாவது:

''செயற்கை ஓடுகளத் திறப்பு விழா மற்றும் சர்வதேசத் தடகளப் போட்டி, தேசியத் தடகளப் போட்டி ஆகியவற்றின் தொடக்க விழா நடக்கும் இன்றைய தினம், தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாளாகும். புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா தலைமையில், தமிழகத்தின் பொற்காலம் நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர் பொறுப்பு ஏற்றவுடன், தமிழக விளையாட்டுத் துறையில், மறுமலர்ச்சி ஏற்பட்டு உள்ளது.

''விளையாட்டு வீரர்கள்-வீராங்கனைகளுக்குப் பல்வேறு சலுகைகளை அவர் அளித்துள்ளார். முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியத் தொகை உயர்த்தப்பட்டு இருக்கிறது. சிறந்த வீரர்-வீராங்கனைகளைத் தேர்வு செய்து ஆண்டு தோறும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு, இதே காலக்கட்டத்தில், உலகமே பிரமிக்கத்தக்க வகையில், நேரு ஸ்டேடியத்தை 225 நாட்களில் 40 கோடி ரூபாய் செலவில் புரட்சித் தலைவி கட்டி முடித்தார்கள். அடுத்த ஆண்டு இறுதியில் 7-வது தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியையும், சென்னையில் நடத்தித் தர இருக்கிறார்கள்.

## அகில உலகத் தரத்துக்கு ஏற்ப ரூ. 2 கோடி செலவில் அமைந்த செயற்கை இழை ஓடுதளம்!

''விளையாட்டுத்துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்த நமது முதல்வர், 1964-ஆம் ஆண்டு சர்ச்பார்க் பள்ளிக்கூடத்தில் படித்தபோது, பொது அறிவு மற்றும் விளையாட்டுப்- போட்டிகளில் தனித் திறமையுடன் விளங்கி விசேஷப் பரிசுகளைப் பெற்றவர் என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு உள்ளேன்.

இந்தப் போட்டிகளை இங்கு சிறப்பாக நடத்துவதில் முதல் அமைச்சர் தீவிர ஆர்வம் காட்டினார். இடைவிடாத பணிகளுக்கு இடையில் இந்தப் போட்டியின் ஏற்பாடுகளைக் கவனித்தார். தமிழகத்தின் வழிகாட்டும் தீபமாகத் திகழும் புரட்சித்தலைவி, இந்த ஓடுகளத்தைத் திறந்து வைத்து, தடகளப்





போட்டிகளைத் தொடங்கி வைக்க ஒப்புக் கொண்டதற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்''.

### விழா நினைவு மலர் வெளியீடு!

பின்னர், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் செயற்கை ஓடுகளப் பாதையைத் திறந்து வைத்தார்.

மேடையில் அவர் மின்விசையை அழுத்தியதும், திடலின் ஓடு புறத்தில் இருந்த சிறிய மேடையின் திரை விலகியது. உலக உருண்டை வெளிப்பட்டது. இன்னிசை ஒலியோடு அந்தப் பூமி உருண்டை, தாமரை மலர் போல் மலர்ந்தது. நடுவில் 'செயற்கை ஓடுகளத்தின் மாதிரி வடிவம்' தென்பட்டது.

போட்டியின் சின்னமான 'லியோ' போல வேடம் பூண்ட ஒரு வீரர் விழா நினைவு மலர்களை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்தார். அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார்.

முதல் பிரதியை, இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார். விழா மலர்கள், மாண்புமிகு கல்வியமைச்சர், திரு சுரேஷ் கல்மாதி, மற்றும் விழாவுக்கு வந்திருந்த இலங்கை அமைச்சர் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

பிறகு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்க்ள், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கவின்மிகு விழாவைச் சம்பிரதாய முறைப்படித் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு க. பொன்னுசாமி, இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன், இந்திய அமெச்சூர் அத்லெடிக் சங்கத் தலைவர் திரு சுரேஷ் கல்மாதி, தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன் மற்றும் கூடுதல் டி.ஜி.பி. திரு டபிள்யு ஐ. தேவாரம், கலை நிகழ்ச்சிக்கு இசையமைத்த திரு ஏ.ஆர். ரகுமான், நடன இயக்குநர் திரு ரகுராம், பாடல்கள் இயற்றித் தந்த கவிஞர் நா. காமராசன், கவிஞர் கோமதிநாயகம் ஆகியோருக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

போட்டியில் பங்குபெற்ற வீரர்கள், வீராங்கனைகள் சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மலர்க் கொத்து வழங்கப்பட்டது.

### அழகிய அணிவகுப்பு!

முதலில், வெள்ளுடை அணிந்த 16 காவல்துறை வீரர்கள், இந்திய அத்லெடிக் சங்கக் கொடி ஏந்தி வலம் வந்தனர்.

போட்டியின் சின்னமான 'லியோ' ஊர்தி ஒன்றில் உலா வந்தது. அதனைத் தொடர்ந்து, 'லியோ' போல் வேடமிட்ட 25 மாணவர்கள் கையை அசைத்தவாறே ஆடிக் கொண்டு வந்தது, அனைவரின் கவனத்தையம் கவர்ந்தது.





## 30 நாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்ட ஒப்பற்ற திருவிழா!

தொடர்ந்து, போட்டியில் பங்கு பெறும் வீரர்களும், வீராங்கனைகளும் தத்தம் நாட்டுக் கொடிகளுடன் அணிவகுத்து வந்தனர். முதலில் ஆஸ்திரிய நாட்டு அணி அணிவகுத்து வந்தது. அடுத்து, பங்களாதேஷ், சைனா, டென்மார்க், ஐஸ்லாந்து, இந்தோனேசியா, இத்தாலி, கென்யா, மலேசியா, நியூசிலாந்து, சிங்கப்பூர், ஸ்விடன், ஐக்கிய அரபுக் குடியரசு, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாட்டு வீரர்களின் அணிவகுப்பைத் தொடர்ந்து, இந்தியாவின் பலவேறு மாநிலங்களைச் சேர்ந்த அணிகள் வந்தன.

ஆந்திரம், அசாம், தில்லி, குஜராத், அரியானா, கர்நாடகம், கேரளம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், ஒரிசா, ராஜஸ்தான், மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம், புதுவை ஆகிய அணிகள் வந்தன.

அடுத்து, நிறுவன அணிகளான கோல் இந்தியா, மின்வாரியம், இந்திய உணவுக் கார்ப்பரேஷன், ஹெவி என்ஜினியரிங், எல்.ஐ.சி. துறைமுகம், ஆயுதத் தளவாட நிலையம், காவல்துறை, தபால் தந்தி, இரயில்வே சர்வீசஸ், உருக்காலை ஆகிய அணிகள் வந்தன.

கடைசியாக, தமிழக அணி பவனி வந்தது. கேப்டன் அண்ணாவி கொடியேந்தி முன்னே வர, அவரைத் தொடர்ந்து தமிழக அணியின் வீரர்களும், வீராங்கனைகளும் கம்பீரமாக அணிவகுத்து வந்தனர். வீரர்கள் வெள்ளை நிற முழுக்கால் சட்டையும், பச்சை நிறக் கோட்டும், வீராங்கனைகள் வெள்ளை நிறச் சேலையும், பச்சை நிறக் கோட்டும் அணிந்திருந்தனர்.

விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு வளைய வந்தபோது, கூடி இருந்த மக்கள் ஆரவாரம் செய்து அவர்களை வரவேற்றனர். வண்ணமயமான இந்த அணிவகுப்பு நம் எண்ணத்தைக் கொள்ளை கொண்டது.

பிறகு, சர்வதேசத் தடகளப் போட்டி மற்றும் 33-வது தேசிய தடகளப் போட்டியையும், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முறைப்படி தொடங்கி வைத்தார். அப்போது குண்டுகள் முழங்கின. புறாக்கள் பறக்கவிடப்பட்டன.

### விளையாட்டுத் தீபம் ஏற்றப்பட்டது!

அடுத்து விள்ளையாட்டுத் தீபம் ஏற்றப்பட்டது. மெரீனா காந்தி சிலையிலிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட தீபத்தை, தமிழகத்தின் முன்னாள் வீரர்களான பாலசுப்பிரமணியம், பாலாம்பாள், ராஜன், சார்லஸ் புரோமியோ, சுந்தர்ராஜ், நிஷார்பாட்சா, சுப்பிரமணியம் தொடர் ஓட்டமாக ஓடி வந்து, தடகள வீரர் திரு நடராஜனிடம் கொடுத்தனர். அவர் ஓடி வந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கொடுத்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டு, ஞானசேகரன், அனுசுயா பாய் ஆகியோரிடம் கொடுத்தார். அரங்கின் வலது புறத்தில் அமைக்கப் பட்டிருந்த 45 அடி உயரக் கோபுரத்தில் தீபத்தை ஏற்றினார்.

தீபக் கோபுரத்தின் அடியில், ஜோதியை வைக்க, சில வினாடிகளில் கோபுரத்தின் மேலே இருந்த தீபம் பற்றிக் கொண்டது.

போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள், வீராங்கனைகள் சார்பில்,



தமிழகத்தைச் சேர்ந்த ஏஞ்சலா வின்சியும், அண்ணாவியும் விளையாட்டு உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர்.

**கண்கவர் கலை நிகழ்ச்சிகள்**

கண்ணையும் கருத்தையும் கவரும் கலை நிகழ்ச்சிகள் நடந்தன.




முதலில் 2,500 மாணவ, மாணவியர் வெள்ளைச் சீருடை அணிந்து, பல வண்ணக் கொடிகளை ஏந்தி வலம் வந்தபோது அரங்கமே ஆரவாரித்தது. அப்போது நூற்றுக்கணக்கான வண்ண பலூன்கள் வானில் பறக்கவிடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பல்வேறு மாநில நடனங்கள் இடம்பெற்றன; அவை நம் இதயத்திலும் இடம் பெற்றன!

முதலில் குஜராத் நடனம். 1000 மாணவியர் கோலாட்டத்துடன் ''வாழ்க தமிழ்நாடே, வளர்க தமிழ் நாடே!'' என்னும் பாடல் வரிகளுக்கேற்ப ஆடியது இன்னும் நம் மனக்கண்முன் நிற்கிறதே!

தொடர்ந்து, நான்கு பள்ளிகளைச் சேர்ந்த 1000 மாணவியர் பங்குபெற்ற பஞ்சாபி பங்கரா நடனமும், 1000 மாணவியர் கலந்து





கொண்டு ஆடிய நாடோடிகளின் 'ஜிப்சி' நடனமும் நம் மனத்தை வெகுவாகக் கவர்ந்தது. இவர்கள் தங்கள் நடனத்தின்போது, 'டாக்டர் ஜெ.ஜெ' என்னும் ஆங்கில எழுத்தை உருவாக்கிக் காட்டிய போது அரங்கத்தில் பலத்த கரவொலி எழுந்தது.

அடுத்து, 12 பள்ளிகளைச் சேர்ந்த 1000 மாணவர்கள் இன்னிசைக்கேற்ப சாகசங்கள் (ஜிம்னாஸ்டிக்) புரிந்து அனைவரின் பாராட்டுக்களையம் பெற்றனர். இந்தச் சாகச நிகழ்ச்சியில் வாண்டுகளும் கலந்துகொண்டு உடற்பயிற்சிகள் செய்து காட்டியது நம்மைப் பிரமிக்கவைத்தது.

### காவலரின் வீரசாகசங்கள்!

தமிழகக் காவல்துறையைச் சேர்ந்த காவலர்கள் காவடி, கரகம் பொய்க்கால் குதிரை நடனம் ஆகியவற்றில் சிறந்தவர்கள் என்பதை மெய்ப்பித்துக்காட்டினார்கள். திரைப்படப் பாடல் மெட்டுகளுக்கேற்ப அழகாக ஆடி, அரங்கிலுள்ளோரையும் ஆட வைத்துவிட்டனர்!.

அடுத்து, நம்மை மெய்சிலிர்க்க வைத்த நிகழ்ச்சி, காவல்துறையினரின் வீரதீரச் செயல்களே! 'புரட்சித்தலைவியின் நெருப்புக் கணைகள்' என்னும் மோட்டார் சைக்கிள் வீரர்கள், மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டே பல சாகசங்களைச் செய்து எல்லாரையும் கவர்ந்துவிட்டார்கள்.

ஓடும் மோட்டார் சைக்கிளில் நின்று கொண்டும், அதில் பொருத்தப்பட்ட ஏணி ஒன்றில் ஏறியும், எதிரும் புதிருமாக வேகமாக வந்தும், ஒரே பைக்கில் பலர் தொங்கிக் கொண்டும், கைகளை விட்டு விட்







டும், இப்படி அவர்கள் புரிந்த வீரசாகசங்கள், அரங்கிலுள்ளோரை அப்படியே ஆடாமல் அசையாமல் இருக்கச் செய்து விட்டன!

ஒரே இருட்டு!

தீப்பந்தங்கள் மட்டும் கண்ணுக்குத் தெரிகின்றன!

திகிலூட்டும் காட்சிபோல இருக்கிறதே என்று யாரும் எண்ண வேண்டாம். எல்லாம், இரயில்வே பாதுகாப்புப் படை வீரர்களின் தீப்பந்த அணிவகுப்புதான் அது! அப்போதுதான் அரங்கினுள் விளக்குகள் அணைக்கப்பட்டன.

தீப்பந்தத்தால் தமிழிலும், ஆங்கிலத்திலும் 'வணக்கம்', 'நல்வரவு',



'பல்லாண்டு வாழ்க!', 'ஜெய் ஹிந்த்', 'முதல்வருக்கு நன்றி' என்னும் வார்த்தைகளை வடிவமைத்துக் காட்டி எல்லாரையும் வசீகரித்து விட்டார்கள்.

இசை ஒலிக்கேற்ப, தீப்பந்தத்தை ஏற்றியும் இறக்கியும் காட்டி, அவர்கள் ஆடியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அதோ, விண்ணிலிருந்த வண்ண மழை கொட்டுகிறதே! ஆம். நாம் காண வேண்டிய வாணவேடிக்கையே அது!

அதிர்வேட்டுகளுக்கிடையே வண்ண ஜாலங்கள் நிகழ்ந்தன. அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்தும் வகையில் வாசகங்களும் தென்பட்டன. கண்ணுக்கு விருந்தூட்டிய இதுவே, தொடக்க விழாவின் கடைசி நிகழ்ச்சியாகவும், கண்கொள்ளாக் காட்சியாகவும் அமைந்தது.



## சர்வதேசத் தடகளப் போட்டி

### —ஒரு பார்வை!

**செயற்கை இழை ஓடுதளம்**

• சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில், ரூ.2 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன செயற்கை இழை ஓடுதளம் சுமார் 14 மி.மீ. தடிமன் கொண்டது.

ஓடுதளமானது, சர்வதேசத் தரத்துக்கு இணையாக இருக்க வேண்டுமானால், குறைந்த அளவு 12 மி.மீ. கனத்தில் இருக்க வேண்டும். ஆனால், ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்தில் அமைக்கப்பட்டுள்ள ஓடுதளம் 2 மி.மீ. கூடுதலாகவுள்ளது. அதாவது, 14 மி.மீ. கனமாக அமைக்கப்பட்டுள்ளது.

**தொலைக்காட்சியில் ஒளிபரப்பு!**

• 2.2.94 அன்று நடந்த தொடக்க நாள் நிகழ்ச்சிகள், தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டன.

**முதல் தடகளப் போட்டி!**

• சர்வதேச அளவில், சென்னையில் நாடைபெறும் முதல் தடகளப் போட்டி இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழகம் பெற்ற முதல் பதக்கம்!**

• ஆடவர் மும்முறை தாண்டுதல் போட்டியில், தமிழகத்துக்கு முதல் பதக்கம் கிடைத்தது. இப்போட்டியில் டி.எம். தங்கவேலு 15.36 மீ. தூரம் தாண்டி வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

சர்வதேசத் தடகளப் போட்டிகள் பிப்ரவரி 3-ந் தேதியிலிருந்து 5-ந் தேதி வரை நடந்தது. போட்டியை அனைவரும் பார்க்க வசதியாக தொடக்க நாளான 2-ந் தேதி சென்னையிலுள்ள அனைத்துப் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. அன்று பிற்பகல் அரசு அலுவலகங்களுக்கும் அரை நாள் விடுமுறை விடப்பட்டது. போட்டியையொட்டி, சிறப்புப் பேருந்துகளும் விடப்பட்டன.

போட்டிகள் காலை 8 மணி முதல் மாலை 5.45 மணி வரை நடந்தன. போட்டியைக் காண நாள்



தோறும் திரளான மக்கள் ஆர்வமுடன் அரங்கில் கூடியிருந்தனர். விளையாட்டு ஆர்வலர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என எல்லாத் திறத்தாரையும் வெகுவாகக் கவர்ந்தன இந்த சர்வதேசத் தடகளப் போட்டிகள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் முயற்சியால், தமிழகத்துக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் நடந்த இந்தச் சர்வதேசத் தடகளப் போட்டி, உலக அரங்கில் ஓர் உன்னதமான இடத்தைப் பெற்றுவிட்டது என்றால், அது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை!

— நிகழ்ச்சித் தொகுப்பு: பி.வி. கிரி



# இரயில்வே அணி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் பெற்றது!

சென்னையில் நடந்த சர்வதேசத் தடகளப் போட்டி 5.2.94 அன்று முடிவடைந்தது. இந்திய இரயில்வே அணி ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை மீண்டும் கைப்பற்றியது. அந்த அணிக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பரிசளித்தார்.

பகதூர் பிரசாத் தலைமையிலான இந்திய இரயில்வே அணி, எதிர்பார்த்தபடி ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

ஆண்கள் அணிகள் பிரிவில் முப்படை அணியும் (135 புள்ளிகள்) மகளிர் அணிகள் பிரிவில் இரயில்வே அணியும் (130 புள்ளிகள்) சாம்பியன் பட்டத்தை வென்றன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 5.2.94 அன்று பிற்பகலில் விளையாட்டு அரங்கத்துக்கு வந்து, விளை யாட்டுப் போட்டிகளை ரசித்துப் பார்த்தார்.

மாண்புமிகு அமைச்சர்கள் திரு எஸ்.டி.சோமசுந்தரம், திரு க. பொன்னுசாமி, திரு இ. மதுசூதனன், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட் ராமன், இ.ஆ.ப., இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன், தமிழகக் கல்வித்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி ஆகியோரும் போட்டி களைப் பார்த்தனர்.

இறுதியில் நடந்த பரிசளிப்பு விழாவில், 'சாம்பியன்' பட்டம் வென்ற அணிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேடயங்களைப் பரிசளித்தார்.

200 மீட்டர் மகளிர் ஒட்டம், 800 மீட்டர் ஆண்கள் ஓட்டம், மகளிர் ஒட்டம், 10 ஆயிரம் மீட்டர் ஆண்கள் ஓட்டம் ஆகியவற்றில் வென்றவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், பதக்கங்களையும், மலர்க் கொத்துக் களையும் வழங்கினார்.

ஒட்டப் பந்தயங்களில் பங்கு பெற்ற வெளிநாட்டு வீராங்கனைகள் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

3000 மீட்டர் ஓட்டத்தில் எலனா ரமனாவோ வென்றதும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமர்ந் திருந்த முக்கியப் பிரமுகர்கள் பகுதிக்கு ஏறிவந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மலர்க்கொத்து வழங்கினார். மலர்க் கொத்தைப் பெற்றுக் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், பந்தயத்தில் வென்ற தற்குப் பாராட்டு தெரிவித்தார்.

சிறிதுநேரம் கழித்து கெலினா (அமெரிக்கா), டிவிலட் மால்கம் (ஜமைக்கா), பாலிக் டேவிஸ் (பகாமஸ்) ஆகிய வீராங்கனைகளும் மேடை ஏறிவந்து மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பார்த்தனர். டிவிலட் மால்கம், கெலினா ஆகிய இருவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதக்கம் வழங்கியபோது எடுத்தப் புகைப் படங்களை மாண்புமிகு முதல்வரிடம் கொடுத்து அதில் கையெழுத்துப் போட்டுத் தரும்படிக் கேட்டனர். மாண்புமிகு முதல்வர் அவர்களும், புன்னகையுடன் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

இரயில்வே மற்றும் முப்படை அணியினர் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

பரிசளிப்பு முடிந்ததும், போட்டி முடிவடைந்ததாக மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு க.பொன்னுசாமி அவர்கள் முறைப்படி அறிவித்தார்.

4 நாட்கள் தொடர்ந்து எரிந்த விளையாட்டுத் தீபம் அணைக்கப்பட்டது; இந்திய அமெச்சூர் அத்லெடிக் சங்கக் கொடியும் இறக்கப்பட்டது.

பின்னர், அந்தக் கொடி மாண்புமிகு கல்வியமைச்சர் திரு க. பொன்னுசாமி அவர்களிடம் தரப்பட்டது. அவர் அதை, தமிழ்நாடு அத்லெடிக் சங்கத் தலைவரான கூடுதல் டி.ஜி.பி. திரு தேவாரம் அவர்களிடம் ஒப்படைத்தார்.

# சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

## சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்




இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

## உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)

1 இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு

2 மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்

2 நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்

3 ஐந்தாவது பரிசுகள் - 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா

10 ஆறாவது பரிசுகள் - 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்

600 ஏழாவது பரிசுகள் - ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்

## பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)
- கிசான் விகாஸ் பத்திரம் (KVP)
- தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE )
- தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)
- 15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)
- மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)
- ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம்
  1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D) 1% ஊக்கத்தொகை
- 3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)
  அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)

மேலும் 2% ஊக்கத்தொகை (குறிப்பிட்ட திட்டத்திற்கு)

## சேமிப்புப்பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை,
சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

வெளியீடு: இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685
சிறு குடும்பம் செல்வக்குடும்பம்

DIPR/884/DIS/93

## இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

# 'புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்'

## —தொடக்க விழா

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத் தொடக்க விழா, 27.1.94 அன்று, சென்னைக் கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடந்தது.

விழாவினையொட்டி, கலைவாணர் அரங்கம், மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

விழாத் தொடக்கத்தில், ஆவடி காவல் துறையினரின் கரகாட்டமும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக இன்னிசைக் குழுவின் இசை நிகழ்ச்சியும் நடந்தது.

தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்டராமன் இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

### முத்தாய்ப்பாக விளங்குகிறது!

விழாவுக்கு மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

"இதுவரை எத்தனையோ நிகழ்ச்சிகளில் போக்குவரத்துத் துறை அமைச்சர் செங்கோட்டையனை நாம் பாராட்டி இருந்தாலும்கூட, இன்றைய நிகழ்ச்சியைப் பார்க்கும்போது, செங்கோட்டையனை "சபாஷ் செங்கோட்டையன்" என்று பாராட்டலாம்.

"இதுவரை 17 போக்குவரத்துக் கழகங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இன்று முதல் புரட்சித்தலைவியின் பெயரால் அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்துக் கழகம், போக்குவரத்துக் கழகங்களுக்கெல்லாம் ஒரு முத்தாய்ப்பாக விளங்கும். மற்ற மாநிலத்தலைவர் பாராட்டும் அளவுக்குத் தமிழகப் போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன. அந்த அளவு சிறப்புக்குரிய போக்குவரத்துக் கழகங்களை ஏற்படுத்தித் தந்த புரட்சித் தலைவி பெயரால் போக்குவரத்துக் கழகத்தை ஏற்படுத்தி இருப்பது பாராட்டத்தக்கது.

"ஒரு ஆண்டுக்கு முன்பே, தமிழகத்தில் பெண்களுக்காகக் காவல் நிலையத்தை ஏற்படுத்தித் தந்துள்ளார் புரட்சித்தலைவி. பாகிஸ்தானில் உள்ள பெண் பிரதமர் பெனாசிர் நேற்று ஒரு மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைத்துள்ளார். அதற்கு அவருக்கு ஏராளமான பாராட்டுகள், விளம்பரங்கள் குவிந்துள்ளன. நமது மாநிலத் தலைவியாக இருக்கும் புரட்சித்தலைவி, மாவட்டந்தோறும் மகளிர் காவல் நிலையத்தை ஏற்படுத்தியுள்ளார். அப்படிப்பட்ட தங்கத் தலைவிக்குத்தான், அவரது பெயரால் போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது".

"புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழக"த்தை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

### திருவிழா போல...

"ஒரு திருவிழா நடக்கிறதென்றால், அந்த திருவிழாவை 'ஜே.ஜே' என்று நடந்தது என்பார்கள். ஒரு திருமண விழா எவ்வாறு நடந்தது என்று பொதுவாகக் கேட்டால் 'ஜே.ஜே' என்று நடந்தது என்பார்கள். அதுபோல புரட்சித் தலைவி பெயரால் தொடங்கப்பட்டுள்ள போக்குவரத்துக் கழகத் தொடக்க விழாவும் "ஜே ஜே" என்று நடைபெறுகிறது".



''எல்லாப் போக்குவரத்துக் கழகத் தொடக்க விழாவிலும் நான் அமைச்சராக இருந்துள்ளேன். அருமை நண்பர் செங்கோட்டையனிடம் எந்தச் செயலை ஒப்படைத்தாலும், அதைச் சீரோடும், சிறப்பாகவும் முடிப்பவர். அதையறிந்து அந்தப் பணியை புரட்சித்தலைவி அவரிடம் ஒப்படைத்துள்ளார்.

**அகில இந்திய அளவில் விருது பெற்றவை!**

''இந்தியத் துணைக் கண்டத்தில் 25 மாநிலங்களில் ஓடும் போக்குவரத்துக் கழகங்களுடன் நமது மாநிலப் போக்குவரத்துக் கழகத்தை ஒப்பிடும்போது, தமிழகப் போக்குவரத்துக் கழகத்தை ஒப்பிடும்போது, தமிழகப் போக்குவரத்துக் கழகம் பாராட்டுதலையும், போற்றுதலையும் பெறுகிறது. அகில இந்திய அளவில் 7,8 விருதுகளையும் பெற்றுள்ளது. டெல்லி, பம்பாய் என்று எந்த மாநிலம் சென்றாலும் சரி. அங்கு பஸ்கள் பஸ்களாக இராது. லாரியை மாற்றி உள்ளார்களோ என்று எண்ணத் தோன்றும். பிற நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கூட நம் மாநிலப் பேருந்துகள் கவர்ந்துள்ளன.

''ரூ.9 இலட்சம் செலவில் இந்தச் சொகுசு பஸ் அமைக்கப்பட்டு உள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் ஓடும் சொகுசு பஸ் கட்டணத்தைவிட, இந்தச் சொகுசு பஸ் கட்டணம் குறைவாக உள்ளது. பல தீயவர்களின் தாக்குதல்களுக்கு கூடப் பஸ்கள் ஆளாகின்றன. கல்லால் அடித்து நொறுக்குகிறார்கள். இதனால் கடந்த 4,5 ஆண்டுகளில் ரூ.7 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.''



**தமிழகம் வழிகாட்டி!**

முதல் நவீன சொகுசுப் பேருந்தை, போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் இயக்கி வைத்துப் பேசியதாவது:

''போக்குவரத்துத் துறையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு உள்ளன. தமிழகம் இந்தியாவுக்கே வழிகாட்டியாக உள்ளது. 1986-இல் போக்குவரத்துத் தொழிலாளர் பென்சன் திட்டம் வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். புரட்சித் தலைவி ஆட்சியில்தான் தொழிலாளர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. உலகில் எந்த நாடுகளிலும் இல்லாத அளவுக்கு இங்கு போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு நல்ல திட்டங்களை புரட்சித் தலைவி செய்து தந்துள்ளார்''.



## சொகுசுப் பேருந்து!

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தமிழ்நாட்டிலிருந்து ஆந்திரா, கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுக்குச் செல்லும்.

முதல் கட்டமாக இந்தப் போக்குவரத்துக் கழகத்தில் 157 அதிநவீன சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இரண்டு இருக்கைகளுக்கு இடையே கால் நீட்டப் போதிய இடைவெளி வசதியும், அலுமினியத் தகடு பொருத்தப்பட்ட பாதுகாப்பான நடைபாதை வசதிகளும் இந்தப் பேருந்துகளில் உள்ளன. பயணிகள் திரைப்படம் பார்த்துச் செல்லும் "வீடியோ" வசதி உள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, பயணத்தின் பொது பயணிகளின் தேவைக்கேற்ப டீ, காபி, சூப், குளிர்பானம் வழங்கும் வசதியும் உள்ளது. சாய்மானத்துடன் கூடிய சொகுசு இருக்கை வசதியும் இருக்கிறது.

முதல் பேருந்தை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், சிறிது தூரம் ஓட்டிச் சென்றது குறிப்பிடத்தக்கது.

**விழாவில் பங்குபெற்ற அமைச்சர்கள்**

விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, திரு. ஆர். எம். வீரப்பன், திரு.க.முத்துசாமி, திரு.கண்ணப்பன், திரு. இ. மதுசூதனன் ஆகியோர் பேசினார்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ். ரகுபதி, திரு. கு.ப. கிருஷ்ணன், திரு.டி.ஜனார்த்தனன், திரு. வி. சத்தியமூர்த்தி, திரு. மு. தென்னவன், திரு. மேலூர் பரமசிவம், திரு.கா.ப.பட்டாபிராமன், திரு. டி.எம். செல்வகணபதி, திரு. மு. ஆனந்தன், திரு.டி.ஜெயக்குமார், திரு. எஸ். நாகூர்மீரான், திரு. பி. ஈசுவரமூர்த்தி, சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. கே. காந்திராஜன், அரசுத் தலைமைக் கொறடா திரு.எஸ்.ஜெயக்குமார் மற்றும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், வாரியத் தலைவர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

விழா முடிவில், போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு.அ.நாகராஜன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.வி. கிரி

## கறவை மாடுகள் வாங்க பழங்குடியினருக்கு நிதி உதவி

தமிழ்நாட்டில் வசிக்கும் பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகவும் மேம்பாட்டிற்காகவும் ஆக்கபூர்வமான திட்டங்களை, தீட்டிச் செயல்படுத்த வேண்டும் என மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டதன் பேரில், தமிழக அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் 1993-94-ஆம் நிதி ஆண்டில் ரூ.72.56 இலட்சம் மதிப்புள்ள சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்த முடிவு எடுத்துள்ளது.

பழங்குடி மக்களுக்குக் கறவை மாடுகளையும் ஆடுகளையும் குறைந்த விலையில் அதிகமான மானியத் தொகையுடன் வாங்கி வழங்கினால், தொடர்ந்து அவர்களுக்கு லாபகரமான ஒரு தொழில் மேற்கொள்ள வாய்ப்புகள் ஏற்படும் என்கின்ற எண்ணத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1993-94-ஆம் நிதி ஆண்டில் 100 பழங்குடியினருக்கு, தலா 9,000 ரூபாய் மதிப்புள்ள 2 கறவை மாடுகள் வாங்கி வழங்குவதற்கு 13.65 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலையில் வசிக்கும் பழங்குடி மக்களுக்கு 75 சதவிகித மானியம் அதாவது, 6,750 ரூபாய் மானியம் ஆகவும், மற்ற பகுதிகளில் வசிக்கும் பழங்குடி மக்களுக்கு 50 சதவிகித மானியம் அதாவது, 4,500 ரூபாய் மானியம் ஆகவும் வழங்கப்படும். மேலும், இந்தக் கறவை மாடுகளை ஆரம்பத்தில் வளர்ப்பதற்கும், தீவன செலவினத்திற்கும் ஒரு நபருக்கு 7,680 ரூபாயும், கறவை மாடுகளைக் காப்புறுதி (Insurance) செய்வதற்கு 450 ரூபாயும், போக்குவரத்துச் செலவுக்கு 450 ரூபாயும் வழங்கப்படும்.

அதேபோன்று, 100 பழங்குடியினருக்கு ஆடுகள் வாங்கி வழங்குவதற்கு 6.3 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.







# குடியரசு தின விழா

தமிழக அரசு சார்பாக சென்னை-மெரினா கடற்கரை - காந்திசிலை அருகே 45-வது குடியரசு தின விழா 26.1.'94 அன்று மிகக்கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

**மாண்புமிகு முதல்வர் வருகை:**

அண்ணல் காந்தியடிகள் அவர்களின் திருவுருவச்சிலை வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் காலை 7.50 மணிக்கு வருகை புரிந்தார்கள். காரில் பயணம் செய்தவாறே சாலை இருபுறமும் குழுமியிருந்த மக்களை நோக்கி கையசைத்த வண்ணம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு வந்தார்கள். அப்போது மக்களின் ஆரவாரம் விண்ணைப் பிளந்தது.

**மேதகு ஆளுநர் வருகை:**

மேதகு ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி அவர்கள் 8 மணி அளவில் வருகை புரிந்தார்கள். அவர்களும் காரில் பயணம் செய்தவாறு, சாலை இருபுறமும் குழுமியிருந்த மக்களை நோக்கி கையசைத்து, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். காநதி சிலை அருகே அமைக்கப்பட்டிருந்த கொடிக் கம்பத்தின் முன்பு மேதகு ஆளுநர் அவர்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வரவேற்றார்.

ஆளுநர் அவர்களுக்கு ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா மற்றும் கோவா மாநிலங்களின் தலைமைப் படைத்தலைவர் மேஜர் ஜெனரல் வி. முல்யே, சென்னை கடற்படை பொறுப்பு அதிகாரி கமோடர் ரவீந்தீர்நாத் மற்றும் தாம்பரம் விமானப்படை அதிகாரி ஏர்கமோடர் எச்.எம்.சிங், காவல் துறை பொது இயக்குநர் ஸ்ரீபால், காவல்துறை கூடுதல் பொது இயக்குநர் தேவாரம், சென்னை நகர கமிஷனர் ராஜகோபாலன் ஆகியோரை முதல்வர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

**கொடி ஏற்றினார்**

சரியாக 8 மணிக்கு நாட்டுப்பண் இசைக்க மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது.

கொடி ஏற்றி முடிந்ததும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அருகே அமைக்கப்பட்டிருந்த பந்தலில் சென்று அமர்ந்தார்.

**அணி வகுப்பு**

தரைப்படை, கப்பற்படை, விமானப் படை வீரர்கள் அணி வகுத்துச் சென்றனர். விமானப் படை விமானங்கள், கப்பற்படை ஹெலிகாப்டர், ஏவுகணை ஆகியவை ராணுவ வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டன. பிறகு முன்னாள் படை வீரர்கள், ரெயில்வே பாதுகாப்புப் படை, தமிழ்நாடு மகளிர் காவல் படை, குதிரைப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை (கறுப்புப் பூனைப்படை), தேசிய மாணவர் படை, சாலை பாதுகாப்பு, சுற்றுக் காவலர் படை, ஊர்க்காவல் படை, தமிழ்நாடு தீயணைப்புப்படை,












பாரத சாரண-சாரணீயர் படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அணி வகுத்துச் சென்றனர்.

அணிவகுப்பு மேடையில் இருந்த ஆளுநர் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

### அண்ணா விருது

வீரச் செயல் புரிந்த 6 நபர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'அண்ணா விருது' வழங்கிச் சிறப்பித்தார். 'அண்ணா விருது' பெற்றவர்களுடன் மாண்புமிகு முதல்வர் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

### ஆடல், பாடல் நிகழ்ச்சி

கும்மி ஆட்டம், கரகம், காவடி, பொய்க்கால் குதிரை ஆட்டம், வானவில் நடனம், மணிப்புரி நடனம், கிராமிய நடனம், அஸ்ஸாமி நடனம். கோவா மாநில நடனம் போன்ற நாட்டிய நிகழ்ச்சிகளை, பல்வேறு பள்ளி மாணவ மாணவியர்கள் நடத்திப் பரவசப்படுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து, தென்னகப் பண்பாட்டு மையம் சார்பில் பிற மாநிலக்கலை நிகழ்ச்சி நடந்தது.

இதில் பாங்கரா (பஞ்சாப்) நடனம், பொனாலு (ஆந்திரப்பிரதேசம்) நடனம், தெய்யம் (கேரளா) பட்டாகுனிதா (கர்நாடகா) நடனம், சாவ் (பீகார்) நடனம், சடயா (ஒரிஸா) நடனம், கிராமிய நடனம் (தமிழ்நாடு) ஆகியவை இடம் பெற்றன.

### அலங்கார வண்டிகள்

நாயன இசை பயிலும் மாணவர்களின் இன்னிசையுடன் பவனி வந்தது நாயன இசை ஊர்தி.




அதனைத் தொடர்ந்து, 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் 50-வது ஆண்டு பொன்விழா நினைவுத் தூணின் மாதிரி அமைப்பையும், மகாகவி பாரதியார் அவர்கள் தன்னுடைய இறுதி நாட்களில் வாழ்ந்து, தமிழக அரசு கையகப்படுத்திய நினைவு இல்லத்தின் முகப்புத் தோற்றத்தையும் தாங்கி, செய்தி-மக்கள் தொடர்புத்துறை அலங்கார ஊர்தி ஊர்ந்து சென்றது.

அதனைத் தொடர்ந்து, தோட்டக் கலைத்துறை, காவல்துறை, வேளாண்மைத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தொழில்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தமிழ்நாட்டு பாடநூல் கழகம், சுற்றுலாத்துறை, மீன் வளத்துறை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, கூட்டுறவுத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, முன்னாள் படை வீரர் நலத்துறை, கோ-ஆப்டெக்ஸ் ஆகியவற்றின் அலங்கார வண்டிகள் ஊர்ந்து சென்றன. அலங்கார வண்டிகளின் அணி வகுப்பு முடிவடைந்ததும், தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

விழாவில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு மதுசூதனன் அவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் திரு எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள், அரசு கொறடா திரு ஜெயக்குமார் அவர்கள், உள் துறைச் செயலர் திரு மலைச்சாமி, இ.ஆ.ப., மற்றும் டெல்லியில் உள்ள தமிழக அரசு சிறப்புப் பிரதிநிதி திரு குழந்தைவேலு மற்றும் அரசுச் செயலர்கள், காவல்துறை மூத்த அதிகாரிகள், வாரியத் தலைவர்கள், அரசு உயர் அதிகாரிகள், முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

### விண்ணில் பறந்த பலூன்கள்

விழா முடிவடைந்ததைக் குறிக்கும் வகையில் வண்ணமிகு பலூன்கள் விண்ணில் பறக்கவிடப்பட்டன.

— நிகழ்ச்சித் தொகுப்பு:
கருணா. சண்முகசுந்தரம்





# குடியரசு தின விழாவில் அண்ணா பதக்கம் பெற்ற வீரர்கள்

தீரச்செயல் புரிந்த பொது மக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு ரூ.1000 மதிப்புள்ள தங்கமுலாம் பூசிய அண்ணா வீரப் பதக்கமும் ரூ.1000-க்கான காசோலையும் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் குடியரசு தின விழாவின்போது வழங்கி **வருகிறது** இவ்வாண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி, பதக்கத்திற்கான மதிப்பும், காசோலையின் மதிப்பும், தலா ரூபாய் 2000 ஆக உயர்த்தப்பட்டு, தீரச்செயல் புரிந்த ஆறு நபர்கட்கு அண்ணா விருதினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் குடியரசு தின விழாவின்போது வழங்கினார்.

அந்த வீரத் திலகங்களைச் சந்தித்து உரையாடியபோது திரட்டிய தகவல்கள்:



**திரு. அ. ரகமதுல்லா: (பெரியார் மாவட்டம்)**

அண்ணா பதக்கம் பெற்ற வேன் டிரைவரான இவர் தன் வண்டியில் 10 அரிமா உறுப்பினர்களை ஏற்றிக் கொண்டு சென்று கொண்டிருந்த போது, சில நபர்கள் துப்பாக்கி முனையில் அவரது வண்டியை வழி மறித்தனர். அதையும் பொருட்படுத்தாது 10 நபர்களைக் காப்பாற்றியே தீரவேண்டும் என்ற நோக்கில் வண்டியை வேகமாக ஓட்டியபோது, துப்பாக்கியால் வழி மறித்தவர்கள் சுட்டனர். அவ்வாறு சுட்டதால் அவரது வலது தோள் பட்டையை குண்டு பதம் பார்க்க, அதையும் பொருட்படுத்தாது வேகமாக ஓட்டியதால் மற்றொரு குண்டு அவரது இடது கையைப் பதம் பார்த்தது. அதையும் பொருட்படுத்தாது இறுதியில் அந்த 10 அரிமா உறுப்பினர்களையும் ஆபத்திலிருந்து காப்பாற்றியதற்காக அவருக்கு வீரப் பதக்கம் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருகரங்களால் இவ்விருதினைப் பெறுவது, நான் பத்து பேரைக் காப்பாற்றியபோது அடைந்த மகிழ்ச்சியைப்போல, அளப்பரியது என்றார் அந்த இளம் வீரர்.



**செல்வன் ஜி. மாதேஸ்வரன் (பெரியார் மாவட்டம்)**

''3.8.1991-ஆம் நாளன்று பவானி கூடுதுறை கோவில் அருகில் உள்ள காவேரி ஆற்றுப்படித்துறையில் ஆடிப்பெருக்கு விழா நடைபெற்றது. ஐ.ஆர்.டி.டி. பொறியியல் கல்லூரி மாணவன் லெனின் அலெக்சாண்டர் குளிக்கும்போது காவேரி ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டான். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த நான் ஆற்றில் குதித்து என்னுயிரைப் பணயம் வைத்து, செல்வன் லெனின் அலெக்சாண்டர் என்ற மாணவனைக் காப்பாற்றினேன். எனக்கு இந்த வீரதீரச் செயலைப் பாராட்டி ''அண்ணா விருது'' வழங்கப்பட்டிருக்கிறது'' என்று கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து பெறும் இந்த விருது தன் வாழ்நாளில் ஒரு திருப்புமுனை என்றும், மேலும் இதுபோல் பல விருது வழங்கும் திட்டங்களை அரசு கொண்டு வரும் என்பதில் தான் பெரும் நம்பிக்கைக் கொள்வதாகவும், இதுபோன்ற தலைவர்கள் நாட்டிற்கு ஒரு 'வரப்பிரசாதம்' எனவும் கூறினார் அந்த தீரர்.



**திருமதி காந்தியம்மாள்:**
**(மதுரை மாவட்டம்)**

''கடந்த 13.11.92 அன்று பெய்த புயல் மழை காரணமாக 42 நபர்கள் உயிருடன் புதைந்த சம்பவத்தின் போது மேகமலை கிராமம் ஏகன் எஸ்டேட்டில் மட்டும் 18 நபர்கள் வீடு சரிந்து, புதைந்து இறந்துவிட்டனர். சம்பவத்தன்று நான் எனது கணவர், எனது மகள் மற்றும் தகப்பனார் ஆகியோரை இழந்து அழுது கொண்டிருந்த சமயத்தில் இரவு சுமார் 12 மணியளவில் பக்கத்து வீட்டிலிருந்து அலறல் சத்தம் கேட்டவுடன் ஓடிச் சென்று பார்த்ததில், அந்த வீட்டின் முன்புறம் இடிந்து கொண்டிருந்ததால், பின்புறம் சென்று கம்பியால் சுவற்றில் ஓட்டை போட்டு இடிபாடுகளில் சிக்கிக் கொண்டிருந்த ஐந்து நபர்களைக் காப்பாற்றினேன். இந்த வீரதீரச் செயலைப் பாராட்டி எனக்கு 'அண்ணா விருது' வழங்கப்பட்டிருக்கிறது''. என்று கூறினார் காந்தியம்மாள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் விருது பெறுவது குறித்து மனம் மகிழ்வதாகக் கூறினார் அந்த வீரப் பெண்மணி.



**செல்வன் மாசிலாமணி:**
**(சிதம்பரனார் மாவட்டம்)**

''பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. அப்பொழுது நான் பள்ளியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு குழியில் ஒரு சிறுவன் (வயது 4) மூழ்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். உடனே என்னுடைய புத்தகங்களை வீசி எறிந்துவிட்டு, என்னுடைய உயிரையும் பொருட்படுத்தாமல், அச்சிறுவனை அந்தப் பெரிய ஆபத்தில் இருந்து காப்பாற்றினேன். இந்த வீரதீரச் செயலைப் பாராட்டி எனக்கு அண்ணா விருது வழங்கப்பட்டிருக்கிறது'' என்றும் பெருமிதத்துடன் கூறினார் இவர்.

பாமரர்களுக்கும், ஏழைகளுக்கும் கருணை காட்டி வரும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து இந்த விருதினைப் பெறுவது அன்னை தெரசா அவர்களிடமிருந்து பெறுவதுபோல் பெருமிதம் ஏற்படுகிறது. இது மாதிரியான விருது, மேலும் பொது மக்களிடையே பொதுநல மனப்பான்மை உணர்வை உயர்த்தும் என்பதில் நம்பிக்கை கொள்வதாகவும் கூறினார்



**செல்வன் பாபு**
**(நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்)**

''திருவாஞ்சியம் கிராமத்தில் உள்ள புத்தாற்றில் செல்வன் ஸ்ரீராமன் (வயது 6) குளித்துக் கொண்டிருக்கும்பொழுது ஆற்றில் விழுந்து மூழ்கி தத்தளித்துக் கொண்டு கையை மட்டும் மேலே ஆட்டிக் கொண்டிருக்கும் போது அதைக் கண்ட நான், தலை முடியினைப் பிடித்துத் தூக்கி, இழுத்து அவனைக் கரை சேர்த்து, உயிரைக் காப்பாற்றினேன். இந்த வீரதீரச் செயலைப் பாராட்டி எனக்கு அண்ணா விருது வழங்கப்பட்டிருக்கிறது'' என்று கூறினான் இந்த 7 வயது வீரச் சிறுவன்.

தான் படிக்கிற பள்ளிக்கூடம் சரியான நிலையில் இல்லை எனவும், அதைப் புதுப்பித்துத் தர அரசு உதவி செய்ய வேண்டுமென அந்த சிறுவன் பொது நோக்கோடு கூறியபோது சிறுவனின் சிறிய மனதில் உள்ள சீரிய நோக்கத்தைக் காண முடிந்தது. வீரச்சிறுவனின் தந்தை கூறியபோது 'இது மாதிரியான விருது வழங்கி சிறப்பிப்பது மாண்புமிகு முதல்வர் அவர்களின் மனிதாபிமானத்தையும், தயாள குணத்தையும் காட்டுகிறது' என்றார்.



**திரு. நகுலன்**
**(கன்னியாகுமரி மாவட்டம்)**

''கடந்த 13.12.92-ஆம் நாளன்று கனத்த மழை பெய்ததின் காரணமாக குழித்துறை தாமிரபரணி ஆற்றில் பெருத்த வெள்ளம் ஏற்பட்டது. நான் உயிரைப் பணயம் வைத்து வெள்ளத்தில் சிக்கிய பல உயிர்களைக் காப்பாற்றி உள்ளேன். குறிப்பாக திரு. அச்சுதன் என்பவரது வீடு வெள்ளத்தில் மூழ்கிய பொழுது அவரது மகள் திவ்வியா, வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டாள். அப்பொழுது நான் தண்ணீரில் குதித்து மரங்களைப் பிடித்து நீந்தி அச்சிறுமியின் உயிரைக் காப்பாற்றினேன். இந்த வீரதீரச் செயலைப் பாராட்டி அரசு எனக்கு அண்ணா விருது வழங்கப்பட்டிருக்கிறது'' என்று கூறினார் பி.ஏ., பி.எட். படித்த பட்டதாரி.

இப்படிப்பட்ட பல விருது வழங்கும் திட்டங்களைக் கொண்டு வந்து சிறப்பிக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டுவது எனது தலையாய கடமையாகிறது. என்று கூறினார் இவர்.

'அண்ணா விருது' பெற்ற அவர்களின் அற்புதச் செயல்கள் நம்மை அண்ணாந்து பார்க்க வைத்தன. சற்றே நம் உள்ளத்தையும் தைத்தன.

''நம் மன நிலங்களிலும்
வீர விதை விதைத்திடுவோம்,
பொது நல வாழ்க்கைப் பூங்காவில் -
மலரும்
மணமிகு மலர்களை வாழ்த்திடுவோம்''.

அவர்கள் நெஞ்சில்
நிறைந்திருந்தது 'திடம்'.
அதனால் நம் நெஞ்சில்
பிடித்து விட்டார்கள் ஒரு 'இடம்
என்பது உண்மை தானே!

சந்திப்பு:
**கருணா. சண்முகசுந்தரம்**

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

**233, N.S.C. Bose Road, Madras-600 001.**

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# மாவட்டங்களில் குடியரசு தினவிழா!

## மாண்புமிகு அமைச்சர்கள் கொடியேற்றினார்கள்

தமிழகத்தில் நடைபெறும் குடியரசு தின விழாவில், இந்த ஆண்டு (1994) முக்கிய மாறுதல் செய்யப்பட்டுள்ளது. மாவட்டத் தலைநகரங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பதிலாக, மாண்புமிகு அமைச்சர்கள் தேசியக் கொடி ஏற்றுவார்கள் என்று, தமிழக அரசு ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கர்நாடகம் போன்ற மாநிலங்களில் குடியரசு தினத்தன்று, மாவட்டத் தலை நகர்களில் அமைச்சர்கள் கொடியேற்று கிறார்கள். இதைக் குறிப்பிட்டு, இதே போன்ற வழக்கத்தைத் தமிழ்நாட்டிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்குக் கோரிக்கை வந்தது.

அரசு இந்தக் கோரிக்கையைப் பரி சீலித்து இந்த ஆண்டு முதல், மாவட்டத் தலைநகர்களில் அமைச்சர்கள் கொடி ஏற்றுவது என்று முடிவு செய்துள்ளது. இதனால் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளை இதுபோன்ற முக்கியமான விழாக்களில் ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.

குடியரசு தினத்தன்று அமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள் வார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

அந்த வகையில், கடந்த ஜனவரி 26-ந்தேதி குடியரசு தின்த்தன்று, அந் தந்த மாவட்டங்களில், மாண்புமிகு அமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதை ஏற்று அரசு நலத் திட்ட உதவிகளை வழங் கினார்கள்.



— மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள்

— மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடா திரு. எஸ். ஜெயக்குமார் அவர்கள்



சென்னை மாவட்டத்தில்...

— மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்






வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில்...

— மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
திருமதி. புலவர் இந்திரகுமாரி அவர்கள்

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில்...

— மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள்



திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில்...

— மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
திரு. இராம. வீரப்பன் அவர்கள்



தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டத்தில்...

— மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. தே. ஜனார்த்தனன் அவர்கள்





தஞ்சாவூர் மாவட்டத்தில்...

— மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள்





இராமநாதபுரம் மாவட்டத்தில்...

— மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர்
திரு. மு. தென்னவன் அவர்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில்...

— மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர்
திரு. எஸ். ரகுபதி அவர்கள்



தருமபுரி மாவட்டத்தில்...
— மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
மீன்வளத்துறை அமைச்சர்
திரு. டி. ஜெயக்குமார் அவர்கள்



கன்னியாகுமரி மாவட்டத்தில்...
— மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. கு. லாரன்ஸ் அவர்கள்



சேலம் மாவட்டத்தில்...
— மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. டி.எம். செல்வகணபதி அவர்கள்






மதுரை மாவட்டத்தில்...

— மாண்புமிகு சட்டமன்றப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி முத்தையா அவர்கள்

— மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மேலூர் ஏ.எம். பரமசிவன் அவர்கள்



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்..

— மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர்மீரான் அவர்கள்



கோவை மாவட்டத்தில்...

— மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள்

— மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் அமைச்சர் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள்



பெரியார் மாவட்டத்தில்...

— மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்



நீலகிரி மாவட்டத்தில்...

— மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. துரை. இராமசாமி அவர்கள்



காமராசர் மாவட்டத்தில்...

— மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள்

— மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி அவர்கள்

## அறிவுரைகள் அறவுரைகள்

• ஒழுக்கம் உள்ள மனிதன் மறந்தும் கடுஞ்சொல் கூறமாட்டான்.

—ஜேம்ஸ் ஆலன்

• மகிழ்ச்சியை ஒழுக்கத்தின் மீதுதான் அமைக்க முடியும்.

—கலெரிட்ஜ்

• அதிகப் பேச்சு, பொய் இவை இரண்டும் நெருங்கிய உறவினர்கள்.

—ராபின்சன் வில்லியம்

• முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக் கொள். பிறகு கட்டளையிடும் பதவி உனக்குத் தானாக வரும்.

—விவேகானந்தர்

• பொறுமையோடு தாங்குபவனே வெற்றியடைகிறான்.

—பெரிசியஸ்





திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில்...

— மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
திரு. எம். சின்னசாமி அவர்கள்

— மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத்தலைவர்
திரு. எஸ். காந்திராஜன் அவர்கள்



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில்...

— மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள்



சிதம்பரனார் மாவட்டத்தில்...

— மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்
திரு. நடேசன் பால்ராஜ் அவர்கள்



திருச்சி மாவட்டத்தில்...

— மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
திரு கு.ப. கிருஷ்ணன் அவர்கள்

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில்...

— மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திரு எம். ஆனந்தன் அவர்கள்





நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில்...

— மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர்
திரு. க. பொன்னுசாமி அவர்கள்



# தமிழக அரசின் திட்டங்களுக்கு

# உலக வங்கியின் துணைத் தலைவர் பாராட்டு!

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, 3.2.1994 அன்று மாலை 6.00 மணிக்கு அவரது இல்லத்தில் உலக வங்கியின் துணைத் தலைவர் டாக்டர் இஸ்மாயில் செராஜெல்டின் (Dr. Ismail Serageldin, Vice-President, World Bank, Washington, USA) வந்து சந்தித்தார். அவருடன் அவரது துறையின் முதுநிலை ஆலோசகர் திரு. பியரி லாண்டல் மில்ஸ் (Mr. Pierre Landel-Mills) மற்றும் திரு. அலெக்ஸாண்டர் வான்டெர் ஆஸ்டன் (Mr. Alexander Vonder Osten) ஆகியோரும் உடன் இருந்தார்கள். அப்போது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்டராமன், நிதித் துறைச் செயலாளர் திரு. என். நாராயணன் ஆகியோரும் உடன் இருந்தார்கள்.

### பாராட்டு

தமிழக அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையில் செயல்படுத்தி வரும் வளர்ச்சிப் பணிகளையும், தமிழக அரசின் கொள்கைகளையும் டாக்டர் இஸ்மாயில் செராஜெல்டின் பாராட்டினார். குறிப்பாக, சமூக நலத் துறையில், தமிழக அரசு எடுத்து வரும் முயற்சிகளை உலக வங்கியின் துணைத் தலைவர் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டினார். சுற்றுப்புறச் சூழல் கெடாமல் அவற்றை நன்முறையில் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்கும் தமிழக அரசு மேற்கொண்டு வரும் புதிய முயற்சிகள் குறித்து, தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்.

### குடிநீர்த் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னைக்குக் குடிநீர் வழங்குவதற்காக, 'புதிய வீராணம் குடிநீர் வழங்கும் திட்டம்' மற்றும் 'தெலுங்கு கங்கை-கிருஷ்ணா நதி நீர்த்திட்டம்' ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, சென்னை மாநகரத்தின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்காக, இந்த இரண்டு திட்டங்களையும் விரைவில் முழுமையாகச் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை உலக வங்கியின் துணைத் தலைவருக்கு எடுத்துரைத்தார். மேலும், இத்திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் அளித்து நிதியுதவி அளிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், உலக வங்கியின் துணைத் தலைவரை கேட்டுக்கொண்ட போது, உலக வங்கியின் துணைத் தலைவர் அவர்களும் ஆவன செய்வதாகத் தெரிவித்தார்.

### நீர்நிலைகள் மேம்பாட்டுத் திட்டம்

தமிழக அரசு 1,450 கோடி ரூபாய் செலவில் திட்டமிட்டுள்ள 'தமிழ்நாடு நீர்நிலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கும்' விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இத்திட்டத்தைச் செயலாக்கும்போது, தமிழ்நாட்டிலுள்ள ஆற்றுப் பாசனம் மற்றும் நதிநீரைத் திறம்பட நிர்வகிக்க முடியும் என்பதையும்



எடுத்துக் காட்டினார். டாக்டர் இஸ்மாயில் செராஜெல்டின் இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சங்களைப் பாராட்டியதோடு, உலக வங்கி இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், உலக வங்கி சுற்றுப்புறச் சூழல் வளர்ச்சி நிதியிலிருந்து (Global Environmental Fund) சென்னை நகருக்குள் உள்ள நீர் நிலைகளின் வளர்ச்சிப் பணிகளுக்காக, நிதியுதவி வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

**ஏழை எளியோர் பயன்பெற...**

அடையாறு மற்றும் கூவம் ஆறு ஆகியவற்றைச் சீர் செய்வதற்கும், பக்கிங்காம் கால்வாயின் நடுப்பாகத்தை முழுமையாக அடைப்பதற்கும் இந்தப் பணம் செலவிடப்படும் என்றும், இதற்காக உலக வங்கி கடனுதவி அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அதே போன்று டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய துணையுடன் தமிழக அரசு தயாரித்துள்ள 'ஒருங்கிணைந்த கடலோரப் பகுதிகளின் வளர்ச்சித் திட்டத்திற்கும்' உலக வங்கி நிதியுதவி வழங்க வேண்டும் என்றும், இந்தத் திட்டம் செயல்படுத்தும் போது கடலோரப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்கள் மிகுதியாகப் பயன் பெறுவார்கள் என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் காட்டினார்.

**நினைவுப் பரிசு!**

உலக வங்கியின் துணைத் தலைவரும், இத்திட்டம் சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் கண்ணோட்டத்துடன் அமைக்கப்பட்டுள்ள காரணத்தால் உலக வங்கி அவற்றைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதையும், தமிழக அரசு உலக வங்கியின் உதவியுடன் தற்போது செயல்படுத்தி வரும் திட்டங்களை நன்முறையில் செயல்படுத்தி வருவதைக் குறித்தும் தனது மகிழ்ச்சியை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் தெரிவித்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் உலக வங்கியின் துணைத் தலைவர் மற்றும் அவருடன் வந்திருந்த இரண்டு ஆலோசகர்களுக்கும், தமிழக அரசின் சார்பில் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.





# “ நலத்திட்டங்களால், எளியோர் வாழ்வில் வறுமை இருள் நீங்கி வளமை ஒளி வீசும்!”

## திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், ரூ.801 கோடி திட்டங்களைத் தொடங்கிவைத்து முதல்வர் உரை

திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூர் அருகே உள்ள குழந்தா கவுண்டனூரில், அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடக்கி வைத்து, அரசின் பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ஐம்பதினாயிரத்துக்கும்மேற்பட்ட பயனாளிகளுக்குப் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 22.1.94 அன்று மிகவும் சிறப்பாக நடந்தது.

கரூர் நகர் முழுவதும் அலங்கார வளைவுகளும், தோரணங்களும் அமைக்கப்பட்டு திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. விழா நடைபெற்ற மைதானத்தில் மாநாட்டுப் பந்தல் பிரம்மாண்டமான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. விழா மேடை, மலர்களால் அழகுற அமைக்கப்பட்டிருந்தது.

காலையிலிருந்தே அமைச்சர் பெருமக்கள், வாரியத் தலைவர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், கட்சிப் பிரமுகர்கள், தொண்டர்கள், மகளிர், இளைஞர்கள், பத்திரிகையாளர்கள், பொது மக்கள் ஆகியோர் மைதானத்தில் குவியத் தொடங்கினர். மேடையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அனைத்து மக்களும் காண்பதற்கு வசதியாக மைதானம் முழுவதும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன.

விழாவில் கலந்து கொள்வதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் மதியம் 12.15 மணிக்கு கரூர் குழந்தா கவுண்டனூரில் விழா மேடையருகே அமைக்கப்பட்டிருந்த ஹெலிகாப்டர் தளத்தில் வந்து இறங்கினார்.

அவரை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. டி. ராஜேந்திரன் அவர்களும்



பொன்னாடைகள் வழங்கி வரவேற்றனர். அங்கிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் காரில் விழா மேடையருகே வந்தார். மேடையிலேறி கூடியிருந்த பொது மக்களைப் பார்த்துக் கை அசைத்தார். பொதுமக்கள் "புரட்சித்தலைவி வாழ்க" என மகிழ்ச்சி ஆரவாரத்துடன் குரல் எழுப்பினர்.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. மா. சின்னசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி முத்தையா அவர்கள் விழாத் தலைமையுரையாற்றினார். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களும், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் புலவர் இந்திர குமாரி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அதனையடுத்து ரூ.521 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு காகிதத்தாள் தொழிற்சாலை விரிவாக்கத் திட்டம், திருச்சி மாவட்டத்திற்கான 18 புதிய பேருந்து வழித்தடங்கள், 6.1 இலட்சம் நபர்களுக்கு எழுத்தறிவு வழங்கும் அறிவொளி இயக்கத் தொடக்க விழா, உள்ளிட்ட ரூ.801 கோடிக்கான திட்டங்களை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்.

அறிவொளி இயக்க ஒலி நாடாக்களை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. டி. ராஜேந்திரன் அவைகளைப் பெற்றுக் கொண்டார்.

அதனையடுத்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.

பின்னர், ஐம்பதனாயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு ரூ.22 கோடி செலவிலான நலத்திட்டங்களை வழங்கினார். அவ்வமயம் தொட்டில் குழந்தை ஒன்றுக்குத்தங்க மோதிரம் அணிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அமைச்சர்களும் மற்ற பிரமுகர்களும் ஏராளமான நினைவுப் பரிசுகளை வழங்கினர்.

## மாண்புமிகு முதல்வர் உரை

வரலாற்றுச் சிறப்புகளும், இயற்கையின் வனப்புகளும் ஒருங்கே அமையப் பெற்று, காவிரித் தாயின் கனிவான அரவணைப்பையும் பெற்றுள்ள, திருச்சி மாவட்டத்திற்கு வருகை தந்து, வணிகத்திற்கும் விருந்தோம்பலுக்கும் பெயர் பெற்ற கரூர் நகரில், இன்று சீரோடும் சிறப்போடும் நடைபெறும் இந்த விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் நாட்டின் மையப் பகுதியில், அதன் இதயம் போன்று அமைந்துள்ள, இம்மாவட்டத்து மக்களின் பண்பாடு, கலாச்சாரம், இனிய எளிய வாழ்க்கை முறை, ஆகியவற்றைப் பார்க்கும் போது, தொன்மையான தமிழ்க் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும், ஒரு 'பண்பாட்டுப் பலகணியாக' இந்த மாவட்டம் திகழ்ந்துகொண்டு இருக்கிறது என்பதை, இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவது, பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இம் மாவட்டத்தில் அமைந்துள்ள தொன்மையான பல திருக்கோயில்கள் பாடல் பெற்ற திருத்தலங்கள் ஆகும். அதுபோன்று, இம்மாவட்டத்தில் அமைந்துள்ள புகழ் பெற்ற கல்வி நிலையங்கள் தமிழகத்தில் எண்ணற்றோருக்குக் கல்வி அறிவைப் புகட்டி, பல மேதைகளை உருவாக்கியுள்ளன. இவ்வாறு வாணிபம், போக்குவரத்து, வேளாண்மை, தொழில் துறை, ஆகிய அனைத்துத் துறைகளிலும், தனக்கென ஒரு தனி இடத்தைத் திருச்சி மாவட்டம் பெற்றுள்ளது.

பல முறை இந்த மாவட்டத்திற்கு நான் வந்து சென்றிருந்தாலும், இம்முறை, இந்த மாவட்டத்து மக்களின் வாழ்க்கை வளம் பெறவும், மாவட்டம் முன்னேற்றம் அடையவும், பல புதிய திட்டங்களைக் கொண்டு வந்துள்ளதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய தினம், இந்த மாவட்டத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக, 801 கோடி ரூபாய் மதிப்புடைய திட்டங்களைத் துவக்கி வைக்கவும் செயல்படுத்தவும், 50,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கும் நான் இங்கே வந்துள்ளேன்.

ஒவ்வொரு முறையும் இதுபோன்ற அரசு விழாக்களில், எனது அன்பிற்குரிய உங்களை எல்லாம் சந்தித்து, பாசமிகு உங்கள் முகங்களைக் காணும் போது நான் மன நிறைவை





அடைகின்றேன். ஆயிரக் கணக்கான பயனாளிகளுக்குத் தனிப்பட்ட முறையில் பல்வேறு அரசு நலத் திட்டங்களின் கீழ் உதவிகள் சென்று சேரும் போது, அவர்களது வாழ்க்கையில் வறுமை இருள் நீங்கி, வளமை என்ற ஒளி வீசும் என்பதை எண்ணி நான் மன மகிழ்ச்சி அடைவது உண்டு. எந்த ஒரு நோக்கத்திற்காக, உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னை இந்த அரசு பீடத்தில் உட்கார வைத்தீர்களோ, அந்த எண்ணம் ஈடேறுவதை நீங்களே கண்கூடாகக் காண்கிறீர்கள். எத்தனை இடையூறுகளையும், இன்னல்களையும் சந்திக்க வேண்டி இருந்தாலும், உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு - மக்களின் அரசு - மக்கள் துயர் துடைக்கும் பணிகளில் அயராது முனைப்புடன் செயல்பட்டு வரும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று அடிக்கல் நாட்டப்பட்டு உள்ள புகளூர் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்துடைய, 525 கோடி ரூபாய் செலவிலான விரிவாக்கத் திட்டம், இம்மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு மட்டுமின்றித் தமிழகத்தின் ஒட்டுமொத்தத் தொழில் வளர்ச்சிக்கும், காகித உற்பத்தியில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குவதற்கும், வழி வகுக்கும் என்று நம்புகின்றேன்.

அன்று புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், இந்தக் காகித ஆலையைத் தொலைநோக்குப் பார்வையோடு இம்மாவட்டத்தில் ஏற்படுத்தித் தந்து, இம்மாவட்டத்து மக்களின் பாராட்டுக்களைப் பெற்றார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் புனிதப் பாதையில் நடந்துவரும் எனக்கு, அதே காகித ஆலையின், விரிவாக்கத் திட்டத்தைத் துவக்கி வைத்து, இம்மாவட்டத்து மக்களின் அன்பைப் பெறுகின்ற வாய்ப்புக் கிடைக்கப் பெற்றதை எண்ணி, நான் பேருவகை அடைகின்றேன்.

பழமையும் புராதனமும் மிக்க திருக்கோயில்கள் பல அமையப் பெற்ற இம்மாவட்டத்தின் ஆன்மீக சேவைக்குச் சிறப்புச் செய்வது போலக் கம்பரசன் பேட்டையில், 'வேத ஆகம பயிற்சிக் கூடம்' நிறுவுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிக் கூடம் ஆரம்பிக்க ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்பதையும்; இந்த 'வேத ஆகம பயிற்சிக் கூடம்', வேத நூல்கள் மற்றும் வேத ஆகமங்களையும், கற்றுத் தரும் ஒரு நிறுவனமாக மட்டும் இன்றி, வேதங்களில் ஆராய்ச்சி செய்யும், ஓர் ஆன்மீக ஆராய்ச்சி மையமாக வும் அமையும் என்பதை, நான் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருங்கால சமுதாயத்திற்கு உதவக் கூடும் வகையில், தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்கள் செயல்படுத்துவது, உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிவகை செய்வது, மாநிலப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைப்பது போன்ற திட்டங்கள் அரசின் நீண்டகாலத் திட்டங்களாகவே பெரும்பாலும் இருக்கின்றன.

ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக இவற்றையெல்லாம் அரசு மேற்கொண்டாலும், சாதாரண மக்களின் - அன்றாடம் உழைத்து வயிறு வளர்க்கும் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளையும், அவர்களின் பல்வேறு துன்பங்களையும் தீர்த்துவைக்க வேண்டும் என்ற மனிதாபிமானக் கடமையினை, எந்த ஒரு மக்கள் அரசும் புறக்கணிக்கக் கூடாது என்ற கொள்கையைத் தான் பேரறிஞர் அண்ணா, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய உத்தமத் தலைவர்கள், தங்கள் வாழ்நாள் முழுவதும் பின்பற்றி வந்தார்கள்.

அந்தப் புனிதத் தலைவர்களின் வழியைப் பின்பற்றி நடக்கும் உங்கள் அன்புச் சகோதரியும், இந்த மக்கள் அரசும், மக்கள் குறை தீர்க்கும் மனிதாபிமானக் கடமையினைச் செவ்வனே ஆற்றி வருகிறது.

மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து, அவற்றையெல்லாம் தீர்த்துவைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாவட்ட வாரியாக நான் மக்களைச் சந்தித்து, அவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, குறைகளைக் கேட்டறிந்து, தகுதியானவர்களுக்கு எல்லாம், அரசு நலத் திட்ட உதவிகளை, என் கைகளாலேயே வழங்கி வருகிறேன். அதில் மகிழ்ச்சியை யும் மனநிறைவையும் அடைகிறேன்.

தற்போது மாவட்ட வாரியாகச் சென்று, அரசின் நலத் திட்ட உதவிகளைப் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு எனது முன்னிலையிலேயே வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து அரசின் நலத் திட்ட உதவிகள் மக்களுக்கு நேரிடையாகச் சென்றடைவதைக் கண்டு, மகிழ்ச்சி அடைந்து வருகின்றேன்.

இந்த விழாவில், 50,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு, 22 கோடி ரூபாய் மதிப்பில், அரசின் நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. நலத் திட்ட உதவிகளைப் பெறும் உங்கள் அனைவருக்கும் இந்த அரசு இன்று வழங்கும் இந்த உதவி, ஒரு

ஆரம்பமே அன்றி முடிவு அல்ல. இன்று அரசு வழங்கும் இந்த உதவிகளை ஓர் ஆதரவாகக் கொண்டு, உங்கள் உழைப்பு எனும் மூலதனத்தை இட்டு, கடுமையாக உழைத்து, நீங்கள் அனைவரும் எல்லா வளங்களும், எல்லா நலன்களும் பெற வேண்டும் என்ற எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேரமின்மை காரணமாக, இந்த விழா மேடையிலேயே சில பயனாளிகளுக்கு மட்டுமே நான் எனது கைகளாலேயே அரசு திட்ட உதவிகளை வழங்க இருக்கின்றேன். இதே விழா அரங்கில், மற்றவர்கள் அமர்ந்திருக்கும் இடங்களுக்குச் சென்று, அவரவர்களுக்கு உரிய உதவிகளை, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்குவார்கள்

இந்த விழாவினை, அனைவரும் வியந்து போற்றும் வண்ணம் அமைத்ததற்கு; தங்களது ஆற்றலை வெளிப்படுத்தி, உழைப்பைச் செலுத்தி, இந்த விழாவினைச் சிறப்பான தொரு விழாவாக அமைத்த மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு ம. சின்னசாமி அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு கே.பொன்னுசாமி அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் மீது அளவு கடந்த பாசத்தையும், நேசத்தையும் கொண்டுள்ள திருச்சி மாவட்ட மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினை வெளிப்படுத்தி, உங்கள் வாழ்வில் என்றும் இன்பங்கள் பெருகவும், தமிழகம் தொடர்ந்து வளர்ச்சியை அடையவும், உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, தனது பணியினைத் தொய்வின்றித் தொடரும் என்பதைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

காற்றாலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதில், அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகின்றது. காகித ஆலையின் சார்பில், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள தேவர் குளத்தில், 55 கோடி ரூபாய் செலவில், 15 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் காற்றாலைத் திட்டத்தினை நான் இன்று துவக்கி வைத்துள்ளேன். மரபு சாரா மின்சார உற்பத்தித் துறையில் இக்காற்றாலைத் திட்டம் தான் இந்தியாவிலேயே மிகப் பெரியது என்ற தனிச் சிறப்பினைக் கொண்டுள்ளது என்பது, தமிழகத்திற்கே பெருமை சேர்க்கக் கூடிய ஒரு செய்தியாகும்.

தற்போது, தமிழக அரசு செயலாக்க முனைந்துள்ள பல மின் திட்டங்கள், தமிழகத்தின் மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதோடு, மின்வெட்டே இல்லாத ஒரு



மாநிலம் தமிழகம் என்ற புரட்சிகரமான சூழ்நிலையை உருவாக்கும்.

திருச்சி மாவட்டத்தின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், மாவட்ட முழுமைக்கும், 29 கோடி ரூபாய் செலவில், மின் இணைப்புகள் வழங்குவதற்கும், புதிய மின்சார நிலையங்கள் நிறுவுவதற்கும், அடிக்கல் நாட்டியுள்ளேன். இத்திட்டங்கள், இம்மாவட்டத்தின் மின்சாரத் தேவையினை முழுமையாகப் பூர்த்தி செய்வதோடு, வளர்ந்து வரும் தொழில் துறையின் வளர்ச்சிக்கு, மேலும் வழி வகுக்கும் என்ற நம்பிக்கையை நான் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

கடந்த 2½ ஆண்டுகளுக்கு மேலாக, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

5½ கோடி ரூபாய் செலவில், இனாம்கரூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்; 4 கோடி ரூபாய் செலவில் பிராட்டியூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்; 1½ கோடி ரூபாய் செலவில், கோ.அபிஷேகபுரம் குடிநீர்த் திட்டம்; 1½ கோடி ரூபாய் செலவில், கல்லக்குடி-புள்ளம்பாடி பேரூராட்சி குடிநீர்த் திட்டம் எனப் பல்வேறு குடிநீர்த் திட்டங்களை உங்கள் அரசு செயல்படுத்தி வருகின்றது. தமிழகத்தில் நகர்ப் புறங்களுக்கு மட்டுமின்றி, எல்லாக் கிராமங்களிலிருக்கும் ஆதிதிராவிடர்கள் இருப்பிடங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு முனைப்புடன் செயலாற்றி வருகிறது என்பதைத்தான், இந்தத் திட்டங்கள் விளக்குகின்றன.

இம்மாவட்டத்தில் உள்ள நிலத்தடி நீரை முழுமையாகப் பயன்படுத்துவதற்காக 2½ கோடி ரூபாய் செலவில், உலக வங்கியின் உதவியோடு 1000 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பதை மிகுந்த

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கிறேன். மேலும், ஒத்தக்கடை-சித்தூர் திட்டம் போன்ற பாசன நீர்த் திட்டங்கள், இம்மாவட்டத்து மக்களுக்குக் கூடுதல் பாசன வசதியை அளிக்கும் என்பதில் ஐயம் இல்லை. அதே போன்று, இம்மாவட்டத்தில் பெருகி வரும் சிறு தொழில் வளர்ச்சிக்கு, மேலும் ஊக்கம் அளிப்பதற்காகக் கரூர் அருகே உள்ள ஆத்தூர் கிராமத்தில், ஒரு கோடி ரூபாய் செலவில், ஒரு புதிய தொழிற் பேட்டை அனைத்து அடிப்படை வசதிகளுடன் உருவாக்கப்பட உள்ளது என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



திருச்சி நகரில், பெருகி வரும் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, 3 குறுகிய ரயில்வே மேம்பாலங்களும், இணைப்புச் சாலைகளும், சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பில் அகலப்படுத்துப் பட்டு, இன்று திறந்து வைக்கப்பட்டு உள்ளன. திருச்சி நகரில், கரூர் நெடுஞ்சாலையிலிருந்து சாலை ரோட்டை இணைக்க, 4 கோடி ரூபாய் செலவில் புற வழிச் சாலை ஒன்றை விரைவில் அமைப்பதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் அரசு பொறுப்பேற்ற பின்பு, இம்மாவட்டத்தில் போக்குவரத்து வசதி இல்லாத 39 கிராமங்களுக்கு 106 புதிய வழித் தடங்களை ஏற்படுத்தி, கூடுதலாகப் புதிய பேருந்துகளைத் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பகுதியைச் சேர்ந்த இளைய தலைமுறையினரின் விஞ்ஞான ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம், திருச்சிக்கு அருகில் 4 கோடி ரூபாய் செலவில், 'அறிவியல் மற்றும் கோள் அரங்கம்' ஒன்று அமைப்பதற்கும், ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## குன்னூர் நிலச்சரிவு: போர்க்கால அடிப்படையில் மலைப்பாதைச் சீரமைப்பு

**1993**-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பெய்த பெருமழை வெள்ளத்தின் காரணமாக நீலகிரி மாவட்டம் குன்னூருக்கு அருகில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலச்சரிவின் காரணமாக ஊட்டி மலைப் பாதையின் ஒரு பகுதி முழுமையாகச் சேதம் அடைந்து, அதனால் மேட்டுப்பாளையம் வழியாக குன்னூர் செல்லும் மலைப் பாதையில் போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டதைத் தொடர்ந்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், நிலச்சரிவையும் நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளையும் ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்டு, சேதத்தின் விவரத்தையும் சேதத்தை சீர் செய்து விரைவில் போக்குவரத்தை மீள ஏற்படுத்தவும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, அறிவுரைகளையும் ஆணைகளையும் வழங்கினார். மேலும் மலைப்பாதையைச் சீர் செய்து அமைப்பதில் தேர்ச்சி பெற்ற எல்லைச் சாலைகள் நிறுவனம் (Border Roads Organisation) என்ற இராணுவப் பிரிவின் சேவையையும் அதன் தொழில்நுட்ப அறிவையும் முழுமையாகப் பயன்படுத்தி விரைவில் பணியை முடிக்க வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருந்தார்.

அதன்படி, எல்லைச் சாலைகள் நிறுவனம், தமிழக நெடுஞ்சாலைத் துறை, விவசாயப் பொறியியல் துறை ஆகியவற்றுடன் இணைந்து, போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொண்டு, பாதிப்புக்குள்ளான மலைப்பாதையைச் சீர் செய்து 80 அடி நீளத்தில் பெய்லிப் பாலத்தையும் (Bailey Bridge) அமைத்து மலைப்பாதையைப் போக்குவரத்துத் தகுதியானதாக ஆக்கியுள்ளது. பொங்கல் திருநாளாம் 14.1.1994 அன்று இந்த மலைப்பாதைப் போக்குவரத்திற்குத் திறந்துவிடப் பட்டுள்ளது.

முழுவதும் சரிந்த நிலையில் இருந்த சாலையைச் சீரமைக்கும் பணியை, கடும் குளிரையும், கடுமையான சூழ்நிலைகளையும் பொருட்படுத்தாது, 6000 பணியாளர்கள் இரவு பகலென அயராது பணியாற்றி, மலைப்பாதையில் ஏற்பட்ட நிலச் சரிவினைச் செப்பனிட்டு, புதிதாக மலைப் பாதையை உருவாக்கி மாண்புமிகு முதல்வரின் வாக்குறுதிக்கு ஏற்பப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றியுள்ளது குறிப்பிடத் தக்க சாதனையாகும். 1.12.1993 அன்று தொடங்கி 45 நாட்களுக்குள், இத்தகைய பெரிய பணியை நிறைவேற்றி, பெய்லி பாலத்தையும் அமைத்துக் கொடுத்த பொறியாளர்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் ஆகியோர்க்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளார்.



# வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம் - சிலை திறப்பு விழா!

## மாண்புமிகு அமைச்சர் நாவலர் பங்கேற்றார்

தந்தை பெரியார் நினைவகம் - தந்தை பெரியார் திருவுருவச் சிலை ஆகியவற்றின் திறப்பு விழா, கேரள மாநிலத்தில் உள்ள வைக்கத்தில் 31.1.94 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அவற்றைத் திறந்துவைத்து விழாப் பேருரையாற்றினார். விழாவிற்குத் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி தலைமை தாங்கினார்.

மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு மு.தென்னவன், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி சுலோசனா சம்பத், கோட்டயம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ரமேஷ் சென்னிதலா, வைக்கம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு கே.கே. பால கிருஷ்ணன், வைக்கம் நகராட்சி மன்றத் தலைவர் திரு அய்யேரி கருணாகரன் நாயர் ஆகியோர் இந்த விழாவில் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாத் தொடக்கத்தில், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு பா.செயப்பிரகாசம் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில், செய்தித்துறை துணை இயக்குநர் திரு இரா.அண்ணாதுரை நன்றி கூறினார்.

**தலைமையுரை**

கேரள மாநிலத்தில் உள்ள வைக்கத்தில், ஏறத்தாழ எழுபது





ஆண்டுகளுக்கு முன்பாகத் தந்தை பெரியார் அவர்களால் நடத்தப் பட்டது தாழ்த்தப்பட்டோர் தெரு நுழைவுப் போராட்டம். அதன் நினைவாகத் தமிழ்நாடு அரசு - அங்கே 73 சென்ட் நிலத்தில், ரூ.15 இலட்சம் செலவில் பெரியார் நினைவகம், படிப்பகம், திருவுருவச் சிலை, திறந்த வெளியரங்கம் ஆகியவற்றை நிறுவியுள்ளது.

அவற்றின் திறப்பு விழாவிற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் திரு கி. வீரமணி அவர்கள் குறிப்பிட்ட தாவது:

"தந்தை பெரியார் அவர்கள் மேற்கொண்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தால், இந்தியாவின் சமூக வரலாற்றில் புதிய புரட்சி உண்டாக்கிய பெருமை இந்த வைக்கத்திற்கு உண்டு.

"பத்தாண்டுகளுக்கு முன்னாலேயேகூட, மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த ஜகஜீவன்ராம் அவர்கள், காசியில், உயர்குடியினரான சம்பூர்ணானந்தத் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கக்கூட எதிப்புத் தெரிவிக்கப் பட்டது. இந்தியாவில், இப்போதும் ஆங்காங்கே தீண்டாமைக் கொடுமைகள் தலைதூக்குவதாக அறிகிறோம். தமிழகத்தில் பெரியார் மட்டும் பிறவாது போயிருந்தால் தமிழ்ச் சமுதாயமே தலைகுனிவுக்கு ஆளாக நேர்ந்திருக்கும்".

— இவ்வாறு தம் உரையை நிகழ்த்திய திரு கி.வீரமணி அவர்கள் — கேரளத்தைச் சேர்ந்த மாவலிக் கரை அருகே டி.கே.மாதவன் நினைவுப் பள்ளியில், 1965-இல் நடந்த கட்டடத் திறப்பு விழாவில் பங்கேற்ற தந்தை பெரியார் அவர்கள், அன்றைய தமது உரையில் வைக்கம் போராட்டம் பற்றிக் குறிப்பிட்ட ஒரு பகுதியின் மலையாள மொழியாக்கக் கையேடு ஒன்றினை வெளியிட்டுக் கூட்டத்தில் வழங்கினார்.

**வாழ்த்துரை:-**

மாண்புமிகு தமிழக அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறை திரு மு. தென்னவன் அவர்கள் தம்முடைய வாழ்த்துரையில் குறிப்பிட்டதாவது:

"தந்தை பெரியார் அவர்கள் மறைந்தும், தமிழகத்தில் இன்றைக்கும் அவருக்கு ஏராளமான தொண்டர்கள் இருந்திடக் காரணம், அவருக்குப் பின்னாலே, அவரைப் போன்ற பகுத்தறிவுவாதிகள் யாருமே இல்லை என்பதுதான்.

"பேரறிவாளர்களான ரூசோ, சாக்ரடீஸ் ஆகியோருடைய சிந்தனைகள் அவர்கள் மறைந்த பிறகுதான் நனவாயின; ஆனால், தாம் வாழும் போதே தமது சீரிய சிந்தனைகள் சட்ட வடிவம் பெறுவதைக் கண்டு மகிழ்ந்தவர், தன் மானச் சிங்கமாம் வெண்தாடி வேந்தர் பெரியார்தான். அவருடைய கனவுகளை நனவாக்கும் வகையில், தமிழகத்தில் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சி நடத்தி வருகிறார்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் பேசுகையில், "மகளிர் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு மாபெரும் புகழ் பெற்றவர் பெரியார்; அவருடைய அரிய தொண்டினாலேதான் தாழ்ந்துகிடந்த தமிழகம் சாதிமத வேறுபாடுகள் குறைந்து தலைநிமிர்ந்தது; பெண்கள் பெருமை பெற அவர் தீட்டிய



## பெரியார் புரட்சி மொழிகள்

★ மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.

★ பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி.

★ மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.

★ விதியை நம்பி மதியை இழக்காதே.

★ மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.

★ மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள் பணி.

★ பிறருக்குத் தொல்லை தராத வாழ்வே ஒழுக்க வாழ்வு.

★ பக்தி இல்லாவிட்டால் இழப்பில்லை. ஒழுக்கம் இல்லாவிட்டால், எல்லாம் பாழ்.

★ தீண்டாமை ஒழிய வேண்டுமானால், சாதி ஒழிய வேண்டும்.

★ கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார் எங்கள் முதல்வர்'' என்றார்.

வைக்கம் நகராட்சி மன்றத் தலைவர், திரு அய்யேரி கருணாகரன் நாயர் பேசும்போது, பெரியாருக்கு நினைவகம் அமைத்த தமிழகத்தின் ஏற்பாட்டைப் பாராட்டினார். ''இதையே முன்னுதாரணமாகக் கொண்டு கேரள மாநிலத் தலைவர்களுக்கும் நினைவகங்கள் அமைக்கப்பட வேண்டும்'' என்றார்.

கோட்டயம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு ரமேஷ் சென்னிதலா பேசுகையில் - தமிழக அரசின் நடவடிக்கைகளைப் பாராட்டினார்.

கோட்டயம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு கே.கே.பாலகிருஷ்ணன், பெரியாரின் சேவைகளை நினைவு கூர்ந்து, அதைப் போற்றி வரும் தமிழக அரசைப் புகழ்ந்துரைத்தார்.




**நாவலர் சிறப்புரை**

தந்தை பெரியாரின் நினைவகம் திருவுருவச் சிலை ஆகியவற்றைத் திறந்துவைத்து மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது சிறப்புரையில் தெரிவித்ததாவது:

''தந்தை பெரியார் அவர்கள் இங்கே இந்த வைக்கத்தில் எழுபது ஆண்டுக் காலத்திற்கு முன்னால் நடத்திய வைக்கம் சத்தியாக்கிரகப் போராட்டம், வெறும் தெரு நுழைவுப் போராட்டம் அல்ல. மனிதன், மனிதனாக நடத்தப்பட வேண்டும்; மனிதனை மனிதன், மனிதனாக நடத்த வேண்டும்; மனிதர்களுக்கிடையே சாதி மத பேதம் கூடாது; சமத்துவம் வேண்டும் என்பன போன்ற நோக்கங்களோடு நடத்தப்பட்டதுதான் வைக்கம் போராட்டம். பெரியார் நினைவகம் திறப்பதோடும், அவர் சிலையைத் திறந்து வைப்பதோடும் நம்முடைய பணி முடிந்துவிடவில்லை; அவர் கருத்துக்களை நிறைவேற்ற அனைவரும் தளராது பாடுபடவேண்டும் என்பதை நினைவூட்டுபவைகளாகவே இவை விளங்கும்.

''மூடப் பழக்கவழக்கங்கள் மூடியிருந்த இந்த உலகையே தமது பகுத்தறிவுச் சுடர் பரப்பி மாற்றி அமைத்தவர் தந்தை பெரியார்; அவர் வழி முறைகளைப் பின்பற்றிப் புதியதோர் உலகு கண்டவர் அறிஞர் அண்ணா; அந்த உலகை அமைதிப் பூங்காவாக்கியவர் டாக்டர் எம்.ஜி.ஆர். இப்போது அந்த உலகிலே கனிந்து குலுங்கும் கனிகளை மக்கள் சுவைக்கச் செய்தவர் எங்கள் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி, டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்.

''இந்தியா சுதந்திரமடைந்து பல ஆண்டுகளாகியும் இன்னும் சில பகுதிகளில் சாதிமதக் கொடுமை - தீண்டாமைக் கொடுமை இருப்பதை மறுக்கமுடியாது; அந்நிலை மாற நாமெல்லாம் அயராது பாடுபட வேண்டும்''.



★ ஒரு நாடு சுபிட்சத்துடன் வாழ வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம்.

★ ஒழுக்கக் குறைவுக்கும் மூட நம்பிக்கைக்கும் எப்படிப்பட்ட கலையும் பயன்பட்டு விடக்கூடாது.

★ வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக்கூடாது. மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.

★ ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறானோ, அப்படி எல்லாரிடமும் தான் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

Licence No.TN/MS(C)/PP-23









